Registered as a News Paper at the G. P. O., Sri Lanka Under No. QB/8965/78

விலைசதம் 50

# ஐக்கியதீபம்

மலர் : 35 ஆனி ஆடி 1980 இதழ் 11–12

ஸ்ரீ ல. தே. கூ. சபையில்
( யாழ்ப்பாணம் )
விற்பனையாகின்றன

| | |
|---|---|
| காசுப்புத்தகம் ஐ நா சங் | 30 00 |
| அங்கத்தவர் பேரேடு | 19-50 |
| அங்கத்தவர் இடாப்பு | 2-05 |
| கடன் மனுப்பத்திரம் ஐ. நா. ச | 10 |
| கடன் முறி ஐ நா ச | 10 |
| மத்தியஸ்த மனு | 10 |
| கேள்விப் பத்திரம் | 10 |

பூரண இயக்கத்தை வளர்க்க

# உறுதி பூணுவோம்!

## தே. கூ. சபைத் தலைவர் வேண்டுகோள்

**பூரணத்துவம் வாய்ந்த கூட்டுறவு இயக்கத்தைக் கூட்டுறவுக் கொள்கைகளின் வழிநின்று கட்டியெழுப்ப ஐம்பத்தெட்டாவது இக் கூட்டுறவுத் தினத்தில் உறுதி பூணுவோம்.**

இவ்வாறு ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவர் திரு. சி. எம். பி. போகொல்லகம அனைத்துலக கூட்டுறவு தினத்தையொட்டி ஐக்கியதீபத்தின் இந்த விசேட இதழுக்கு அனுப்பிவைத்துள்ள செய்தியில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இத்தகைய உறுதிபூணும் செயல் மூலம் கூட்டுறவுத் தினத்தில் பாடசாலை மாணவர்களுக்கு கூட்டுறவுக் கொள்கைகள், நடைமுறைகள், சமுதாயத்தில் அவற்றின் பங்கு-முதலியனபற்றி நாம் எடுத்துரைப்போம். சங்கத்தில் உறுப்பினர்களுக்குள்ள பங்கு தொடர்புகள் முதலியவற்றை எடுத்து விளக்குவோம் என அவர் மேலும் கூறியுள்ளார். சங்கத்தை திறம்பட நிருவகிப்பது, உறுப்பி

(தொடர்ச்சி 12ம் பக்கம்

## கூட்டுறவால் பிரச்சினைகளின்றி வாழலாம்

மு. ஆலால சுந்தரம்
(தலைவர், யாழ் மாவட்டக் குழு)

கூட்டுறவு இயக்கத்தின் புனிதத் தன்மையை மக்கள் பூரணமாக உணர்ந்து செயற்பட ஆரம்பித்தால் மனித இனம் பிரச்சினைகள் எதுவுமின்றி வாழ முடியும்.

நற்பயன்களைப் பெறுவதற்கு மனிதர்கள் மட்டுமல்ல உலக நாடுகளே கூட்டுறவு கொள்கின்றன.

எமது நாட்டைப் பொறுத்தமட்டில் இரண்டாம் உலகப் போர் காலத்தில் மக்களின் அத்தியாவசியப் பொருட்களை வழங்கும் பணிக்காகவே கூட்டுறவு முன்ற பரந்த அடிப்படையில் அமுலாக்கப்பட்டது. அக்காலத்திலிருந்து கூட்டுறவு இயக்கம் எம் நாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், பல்வேறு துறையில் நாடும் மக்களும் முன்னேறுவதற்குமான பேரியக்கமாக மாறி வந்துள்ளது.

இன்றைய நிலையில் கூட்டுறவு இயக்கம் எமது நாட்டின் பல்வேறு தொழிற்துறைகளிலும், தலை தூக்கியுள்ளதைக் காணுகின்றோம்.

இன்று கூட்டுறவு இயக்கம் நாட்டு மக்கள் மத்தியில் விரிந்து, பரந்து செயற்பட்டு வந்தாலும் மக்கள் அதன் மூலமான முழுப்

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

## கூட்டுறவு ஒளி ஒவ்வொரு இல்லத்திலும் பரவட்டும்!

எஸ். ஞானப்பிரகாசம்
(கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர்)

உலகெங்கணும் உள்ள கூட்டுறவாளர்கள் ஐம்பத்தெட்டாவது கூட்டுறவுத் தின விழாவைக் கொண்டாடும் இம்மாதத்தில் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச்சபை தமது கூட்டுறவுப் பத்திரிகையான ஐக்கியதீபத்தை கூட்டுறவுத் தினவிழாச் சிறப்பிதழாக வெளியிடுவது பாராட்டத்தக்கதாகும்

கூட்டுறவின் மூலமே ஒரு சமதர்ம சமுதாயத்தை உருவாக்க முடியும் பொருளாதார வலிமை குன்றியோர் தமது பொருளாதார நிலையை உயர்த் ஒரு சிறந்த சாதனம் கூட்டுறவே எதிர்வரும் காலத்திலும் 'ஐக்கியதீபம்' கூட்டுறவு ஒளியை ஒவ்வொரு இல்லத்திலும் பரப்பி கூட்டுறவுக் கல்விக்குச் சிறந்த சேவையாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

## உழைக்கும் மக்களின் வாழ்க்கைமுறை கூட்டுறவு

தி. இராசநாயகம்
உபதலைவர், தே. கூ சபை

ஐம்பத்தெட்டாவது சர்வதேச கூட்டுறவாளர் தினவிழாவினையொட்டி ஐக்கிதீபத்தினை விசேட மலராக வெளியிட யாழ் மாவட்டக் கிளையினர் நடவடிக்கை எடுத்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது. கூட்டுறவு முறையானது சாதாரண உழைக்கும் மக்களின் வாழ்க்கை முறையாக இருந்தது என்பதனைக் கிராமிய மக்களின் வாழ்க்கை. வரலாற்றை ஆராய்ந்து அறிஞர்கள் எமக்கு வெளிபபடுத்தியுள்ளனர். என்னதான் குறைகள் இருப்பதாக எம்மவர் கூறிக்கொண்டாலும் இக் கூட்டுறவு முறையே ஆகக் கூடிய சேவையைச் செய்துள்ளதுடன், இன்னும் தொடர்ந்து சேவை செய்யும் சாதனமாக இயங்கி வருகிறது.

பொருளாதார ரீதியாக நலிவுற்ற மக்களை மேம்படுத்த வல்ல கூட்டுறவுத் தத்துவத்தை மக்களுக்கு நன்முறையில் புகட்டும் பணியில் "ஐக்கியதீபம்" தொடர்ந்தும் வெற்றிநடை போட எனது வாழ்த்துக்கள் உரித்தாகுக

## கூட்டுறவை இலட்சியப் பாதையில் வளர்ப்போம்!

சி அங்கதுரைவேல
பொதுச் செயலாளர், தே. கூ. சபை

கூட்டுறவுத்தினம் கூட்டுறவாளர்களால் கொண்டாடப்படும்தினமாகும் இவ்வருடம் ஆடிமாதம் 5-ம் திகதி சனிக்கிழமை இத்தினம் வருகிறது. ஒரு குறிப்பிட்ட நாளிலே எல்லோரும் கொண்டாட முடியாவிட்டாலும், எமது நாட்டில ஆடி மாதம் முழுவதும் கூட்டுறவுத் தினக் கொண்டாட்டங்கள் இடம் பெறுகின்றன. இத்தினங்களில் கூட்டுறவாளராகிய நாங்கள் இயக்கத்தின் கடந்த கால வரலாற்றையும், இடபோதைய நிலையையும், வருங்காலத்தையும் சிந்திப்பது பெரிதும் நன்மை பயக்கும், கடந்த காலத்தை நினைக்கும் பொழுது எமது கூட்டுறவுப் பெரியார்கள் தந்த அனுபவங்களையும், அவர்கள் இயக்கத்திற்கு ஆற்றிய தொண்டுகளையும் குறித்து சிந்திக்க வேண்டும். இன்றைய நிலையை ஆராயும் வேளையில் கூட்டுறவாளர்களாகிய நாங்கள் கூட்டுறவு இயக்கத்தை அதன் இலட்சியப் பாதையில் கொண்டு செல்வதற்கு உறுதிபூணவேண்டும். வருங்காலத்தைப் பொறுத்தமட்டில் பலம்வாய்ந்த இயக்கமாக வளர்த்து இளம் சந்ததியினரின் கையில் அவர்களின் வாழ்க்கையை வளம்படுத்தும் இயக்கமாக மிளிரக்கூடிய வகையில் கையளிக்கவேண்டும். இந்த அரும்பெரும் கைங்கரியத்தில் நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எனது ஆசிகளைக் கூற விரும்புகின்றேன்.

**கூட்டுறவுத் தினவிழா சிறப்பிதழ்**

# வானவில் கொடி:
## வேற்றுமையில் ஒற்றுமை காட்டும் கூட்டுறவின் சின்னம்

கூட்டுறவுத் தினவிழாக்கள் உலகெங்கும் கொண்டாடப்படுகின்ற மங்கலத் திருநாளிலே வானவில்லின் வண்ணக்கொடி எங்கும் பட்டொளி வீசிப்பறக்கும் அழகுக் காட்சி கண்ணுக்கும், கருத்துக்கும் இனிமை பயக்கும்.

இவ்வண்ணக் கொடியைப் 1923 ல் அனைத்துலகக் கூட்டுறவு நிறுவனம் தனது கொடியாக உவந்தெடுத்தது.

அந்த அழகுக் கொடி இன்று கூட்டுறவு அரசோச்சும் இடமெங்கும் கூட்டுறவின் பொதுச்சின்னமாமாகத் திகழ்கின்றது.

வானவில்லிலே ஒளிரும் ஏழ்வகை வண்ணங்களும் கூட்டுறவுக் கொடியில் ஏன் இடம் பெற்றன என்பது குறித்துச் சிந்திப்பது சிந்தனைக்கு நல் விருந்தளிக்கும்.

அனைத்துல கூட்டுறவு நிறுவனம் 1923 ல் வானவில் கொடியை தனது உத்தியோக பூர்வமான சின்னமாகக் கொள்ளு முன்னர் பிரான்சிலே இக்கொடி நீண்ட காலமாகப் புழக்கத்திலே இருந்து வந்தது.

இக்கொடியை கூட்டுறவின் தத்துவக் குறியீடாக ஊறியர் என்னும் பிரெஞ்சுக்காரரின் சீடர்களே முதன் முதலில் கைக்கொள்ளத் தொடங்கினர். உற்பத்தியாளரும், பாவனையாளரும் குழுக்களாக இணைந்து சமுதாயங்களை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தவர் ஊறியர் என்பது குறிப்பிடத்தக்கது. குறித்த சமுதாயங்கள் சமத்துவத்தின் அடிப்படையில் அல்லாது உழைப்பு, திறமை மூலதனம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைய வேண்டுமென அன்னார் கூறினார்.

ஊறியரின் முதலாவது நினைவு ஆண்டினை அச்சீடர்கள் 1838 ல் அனுட்டித்த போது வேற்றுமையில் ஒற்றுமை என்ற அவரது தத்துவத்தை விளக்கும்பொருட்டு வானவில்லின் வண்ணங்களை அவர்கள் இணைத்துக் கொண்டனர்.
ஒவ்வொரு ஆண்டும் ஊறியரின் நினைவு தினத்தை அனுட்டிப்பது வழக்கமாகியது. வானவில் கொடி அவரின் இலட்சியங்களை வெளிப்படுத்தும் சின்னமாகிற்று.

ஊறியரின் சீடரில் ஒருவராகிய பேனுடோ என்பவர் 1896 ல் பாரீசில் நடைபெற்ற இரண்டாவது

(தொடர்ச்சி 11 ம் பக்கம்)

[முகாமை மட்டப் பணியாளருக்கான கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்ற கட்டுரை]

# கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைத்தரத்தை உயர்த்துவதற்கு வழிகள்

சி. இரத்தினசிங்கம்
அளவெட்டி மல்லாகம் ப நோ. கூ. ச.

அமைப்பை நோக்கின் கூட்டுரவு நிறுவனம் அங்கத்தவரின் தேவைகளைப் பூர்த்தி செய்து பொருளாதார மேம்பாட்டை அடையச் செய்ய தாபிக்கப்பட்டதாகவுள்ளது. இன்றைய நிலையில் இலங்கையைப் பொறுத்தவரையில் ஒருபடி முன்னேறி இந்த நிறுவனம் இலங்கையின் பொருளாதாரத்திலும் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. எனவே, இந்த ஸ்தாபனத்தின் முகாமைத்தரம் ஏனைய தாபனங்களுடன் இணைந்ததாக இருத்தல் அவசியம்.

நோக்கம் என்பது தொழிலை அல்லது வேலையை ஆரம்பிக்கும்போது அந்தத் தொழில் அல்லது முயற்சி தன்னகத்தே கொண்டிருந்த இலட்சியமாகும் இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதே முகாமை. தரப்பட்ட பொருளாதார வளங்களாகிய நிலம், உழைப்பு, மூலதனம் என்பவை மட்டானவையே. இவற்றை உபயோகித்து ஆகக்கூடிய ஆக்கத்தை வெளியிட வேண்டியது முகாமை;

இந்த அடிப்படைகளை வைத்து ஆராயுமிடத்து இன்றைய கூட்டுறவுச் சங்கங்கள் கொண்டிருந்த மூலவளங்களை முகாமையின் இயலாமையால் நிறைவேற்றவேண்டியவற்றை நிறைவேற்றத் தவறிவிட்டன என்றே கூறலாம்.

திட்டமிடப்பட்டு, அமைத்து வழங்கப்பட்டுள்ள இந்த நிறுவனத்தை எவ்வாறு முகாமை செய்யலாம். அதிகாரம் வழங்குதலைச் சற்று ஆராய்வோமாயின் கூட்டுறவுச் சங்கங்களின் ஆளணித் தேவைக்கேற்ப பணியாளர் சேவை ஆணைக்குழு பதவிகளையும் அதற்குரிய படிகளையும் தீர்மானித்துள்ளது. இந்த ஆளணிக்கேற்பச் சங்கங்கள் ஒவ்வொன்றும் தமது நடைமுறை விதிகளை இயற்றியுள்ளன. இதற்கேற்ப பணியாளர்களுக்குக் கடமைப் பட்டியல்கள் வழங்கப்பட்டுள்ளன. அடுத்து ஊக்குவித்தல் என்பது நிறுவன அமைப்பை விடுத்து முகாமைக் கேற்றவற்றை ஆராய்வோமாயின் இத் நிறுவனத்தில் இலாபமடையும் காலங்களில் இலாபத்திற்கேற்ப ஒருமாதச் சம்பளத்திற்கு மேற்படாத தொகை போனசாக வழங்கப்படுகிறது. ஊக்குவிப்புப் படிகளும் வழங்கப்படுகின்றன. அடுத்துக் கணித்தல் என்பது மிக அருமையாகவே இங்கு உள்ளது, கட்டுப்படுத்தல் என்பது இருப்பினும் அது சரியாக இல்லை. எனவே, இத்தரவுகளை வைத்து ஆராய்ந்து எவ்வாறு மாற்றியமைத்தல் வேண்டும் என்பதை வெளியிட உத்தேசிக்கின்றேன்.

அமைத்தல் என்னும் விடயம் கொள்கைக்கேற்ப உள்ளது. பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட கடமையும் அதன் அதிகாரமும் நடைமுறையில் திருத்த வேண்டியதாகும். கிளை ரீதியில் ஆராய்ந்தால் அந்தக் கிளையின் முகாமையாளர் அந்தக் கிளை எல்லைபரப்பை நன்கு அறிந்தவராகவும், அந்த மக்களின் தேவைகளை உணர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும். கிளைக் குழுக்களதும் அக்கிளையின் பொதுச் சபையினதும், பாவனையாளர்களினதும் அபிலாசைகளை அறிந்தவராக இருத்தல் வேண்டும். இது காலத்துக்குக் காலம் மாற்றப்பட்டுச் சேவை புரியும் முகாமையாளர்களால் கவனிக்கக் கூடியதாக இருப்பதில்லை. மேலும், இவரது அதிகாரத்தை நோக்கின் அதைத்திடமாக அந்தக் கிளையின் ஊழியரிடம்வெளியிட்டால் அது அவருக்குச் சேர்வுத் தொகையாக மாறலாம் என்ற பயம்.இது சோர்வில் கூட்டுப் பொறுப்பின்மையை உணர்த்துகிறது. பிழைகள் கண்டுபிடிக்கப்பட்டால் அந்தவிற்பனையாளர் தண்டிக்கப்படுவது மிக அரிது. ஆகக் கூடியது ஒரு கிளை மாற்றமாகத்தான் அமைகிறது. அதனால் மீண்டும் முகாமையாளர் என்ற இன்னொரு கிளைப் பொறுப்பாளர் தான் பாதிக்கப்படுகிறார் என்பதை பவர் உணரவில்லை அடுத்த நிலையில் பகுதி முகாமையாளர். இவர் அந்தப் பகுதியில் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். உதாரணமாகக் கடனுதவு சந்தைப்படுத்தல் முகாமையாளரை எடுத்துக்கொண்டால் இவர் அப்பகுதிக்கு வேண்டிய திட்டங்களை முற்கூட்டியே மனதில்கொண்டு செயல்படக் கூடியவராக இருத்தல் வேண்டும். அப்பகுதிப் பணியாளரின் குறை நிறைகளை நேரில் ஆராய்ந்து அவ்வப்போது அறிக்கைகள் சமர்ப்பிக்க வேண்டும். பணியாளரின் குறைகளைக்களைய முயற்சியெடுக்க வேண்டும் இது இப்பகுதியில் இல்லை எனலாம். இருந்தால் அது செயலற்றதாகவே இருக்கின்றது. உச்சமட்ட முகாமை ஒரு நிறுவனத்தின் சகல பகுதிகளையும் நன்கு அறிந்ததாகவும், அந்தப் பகுதிகள் சம்பந்தமான தேசிய மட்ட, அகில உலக மட்ட மாற்றங்களை அவ்வப்போது அறிந்து செயல்படக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். இந்த உச்ச மட்ட முகாமையே சகல அதிகாரங்களையும் உடையதாகக் காணப்படுகின்றது. இது அவ்வப்போது ஆங்காங்கு காணப்படும் குறைகளையும் நிறைகளையும் வெளிப்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும். இந்த முகாமையின் வெளிப்படுத்தல் நேர்மையாகவும், சரியானதாகவும், இருத்தல் அவசியம். இந்த முகாமை மட்டங்கள் ஒவ்வொன்றும் மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும், மேலும் தத்தமது பகுதி மட்டங்களிலும் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். இந்தத் தொடர்புகள் நல்ல முறையில் இருப்பதாகத் தெரியவில்லை. தற்போது சங்கங்களில் அதிகார தோரணைத் தொடர்புகளே காணப்படுகின்றன, இவ்வாறான தொடர்புகள் இருப்பது அவசியம். எனினும் அந்த நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு வேண்டிய தொடர்புகளையும் வைத்திருத்தல் இன்றியமையாததாகும்.

சரியான முகாமை அடிப்படையில் பார்ப்போமாயின் இயக்குநர் சபை சங்கத்தின் கொள்கைகளை வகுக்கின்றது. பொது முகாமையாளர் அதை அமுல் நடாத்துகிறார். தலைவர், பொது முகாமையாளருக்கு அவ்வப்போது வேண்டிய ஆலோசனைகளைக் கூறுகிறார் தலைவர் மற்றைய பணியாளர்களுடன் அதிகார தோரணையிலான தொடர்புகளை வைத்துக் கொள்வதில்லை, பொது முகாமையாளர் பகுதிமுகாமையாளர்களைப் பணித்து அவர்களின் மூலம் கடமைகளை நிறைவேற்றுகின்றார். பகுதி முகாமையாளர்கள் கீழ்மட்ட முகாமையுடன் நேரடியாகத் தொடர்புகளையும் அதிகாரத்தையும் செலுத்துகின்றார். பகுதி முகாமையாளர்களின் கடமைகள் சரியாக நடைபெறுவதையும், கீழ்மட்ட முகாமைக்கு வேண்டிய பணிப்புகளையும் பொது முகாமையாளர் கவனித்துக்கொள்கின்றார்.

அதிகாரம் வழங்குதல் என்னும் தலையங்கத்தில் முகாமைத் தரத்தை உயர்த்தவேண்டிய வழிகள் இவையாகும். இவற்றைச் சரிவரச் செய்யாத சங்கங்கள் திருத்திக் கொள்ளுதல் வேண்டும்.

மேலும், சங்கங்களில் நடைமுறையில் உள்ள ஊக்குவித்தல் போதுமானதல்ல. சங்கம் இலாப நோக்கமற்றதுதான். ஆயினும் இன்றைய நிலையில் ஓரளவு இலாபத்தையும் சேவை செய்வதன் மூலம் பெறவேண்டும் அவ்வாறு பெறப்படும் இலாபத்தின் ஒருபகுதி கிட்டத்தட்ட 25% வீதமாயினும் பணியாளர்களுக்கு ஒருமாதச் சம்பளத்திற்கு மேற்பட்டாலும் வழங்குதல் வேண்டும். மற்றைய ஊக்குவிப்புகளும் தற்போது நுகர்ச்சிக் கிளைகளுக்கே வழங்கப்படுகிறது. இது பகுதி முகாமையாளர் முதல் பொது முகாமையாளர் வரை நீடிக்கப்பட வேண்டும். மேலும், சமூக ஊ

(தொடர்ச்சி 9 ம் பக்கம்)

[பாடசாலை மாண.வர்களுக்கான கட்டுரைப் போட்டியில் மத்திய பிரிவில் முதலாவது இடம்பெற்ற கட்டுரை]

# கூட்டுறவும் கிராம அபிவிருத்தியும்


து. நிர்மலாதேவி
அருணாசல வித்தியாசாலை, அளவெட்டி.


விஞ்ஞானத்திலே விண்ணுலகை ஆராயும் இக் காலத்திலே கூட்டுறவென்ற சொற்றொடர் உணர்த்தும் பொருளை இன்று அறியாதார் யாருமிலர் சிறுர் தொடக்கம் பாமரர் வரையுங்கூட கூட்டுறவு என்பது மக்களால் மக்களுக்காக மக்களின் நலன் கருதி ஆக்கப்பட்ட உன்னத களஞ்சியம் என்பதை உணர்ந்திருக்கிறார்கள். நாகரீக வாழ்வு வாழும் நகரங்களிலோ, அன்றி கிராமம் தோறும் கூட்டுறவுத் தத்துவம் ஆங்காங்கே பல்கிப் பெருகியுள்ளது

கீழ்நிலை அடைந்த கிராமங்களைக் கீர்த்தி பெறச் செய்வதே கூட்டுறவின் முக்கிய கொள்கை என்பது வெள்ளிடைமலை. கிராம அபிவிருத்தியே கூட்டுறவின் குறிக்கோளாகும். கிராமத்தைத் தாங்கும் தூணாக விளங்குகின்றது கூட்டுறவு. கூட்டுறவால் கிராமம் பெறும் நன்மைடுகள் எண்ணிலடங்கா. எத்துரைக்கப் புகிளுே அதற்கும் எல்லையில்லை.

கிராமிய வங்கிகளைத் தன்கீழ் அமைத்துள்ளது கூட்டுறவு இதனால் ஏழை விவசாயியின் ஏழைமையைப் போக்கி ஏர்பிடிப்பவன் கைதான் உலகிற்கு உறுதுணை என்பதை உணர்ந்திருக்கிறார்கள் விவசாயிகளுக்கு கடன்களை வழங்கி அவர்களைப் பணம் படைத்தமுதலாளிகளிடம்இருந்து காத்தளிக்கின்றது இதனால் மனச் சோர்வின்றி மண்ணிலிருந்து பயன் பெற்ற விவசாயி நாட்டினைக் காக்க விழைகின்றான்.

கிராமிய வங்கிகள் மூலம் சேமிப்பை அறிமுகம் செய்து வைத்து அவனது பிற்கால வாழ்க்கைக் குவையபைத்தேடி வைக்க வழிவகுக்கின்றது. கூட்டுறவு. சேமிப்பின் சேவையைச் சிறிதும் சிந்திக்காத மக்களிடம் சேமிப்பைப் பரப்பியது கூட்டுறவு என்ருல் அது மிகையாகாது.

படித்து விட்டுப் பட்டினியால் வேலை தேடி அலையும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும்கூட்டுறவு வேலை வாய்ப்பளிக்கின்றது. கோழிப்பண்ணைகள், பாற்பண்ணைகள், நெசவு, தையல், பனந்தொழில் உற்பத்தி, மரவேலை, தீப்பெட்டி தயாரித்தல் போன்ற சிறு கைத்தொழில் நிலையங்களை ஆரம்பித்து அவர்களை அதில் ஈடுபடுத்தி உழைப்பு வழங்குகின்றது. ஆதலால் அவர்கள் தம் வாழ்வு பெறவும், அவர்கள் குடும்பமும் வாழ்வு பெறுகின்ற வாய்ப்பளிக்கின்றது எனவே கிராம மக்களிடம் உள்ள வேலையில்லாப் பிரச்சினையையும் தீர்த்து வைக்கின்ற தொழில் வங்கியாகவும் உள்ளது.

வீடற்ற கிராம மக்களின் இன்னலைப் போக்கவும் முன் வந்துள்ளது. பின் தங்கிய கிராமங்களில் சிறு சிறு குடிசைகளில் வாழும் ஏழை மக்களின் ஏழ்மையைப் போக்கி சுகாதார அமைப்புடனும் கூடிய வசதிகளுடனும் உள்ள வீடுகளை அமைத்து அவர்களுக்குப் புத்துயிரும், புது வாழ்வும் அளிக்கின்றது.

கூட்டுறவுச் சங்கமும், அதன் அங்கத்தவரும், அங்கு பணிபுரிவோரும் பேச்சளவில் மாத்திரம் நில்லாது செய்கையளவில் ஒழுகி நின்ருல் வறுமையாகிய கடலில் இருந்து தப்புவிக்கும் மரக்கலமாகக் கூட்டுறவு விளங்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்றதாகும்.

விவசாயிகளிடம் உள்ள உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்து, நுகர்வோருக்கு நியாயமான அளவில் நியாயமான விலையில் வழங்குகின்றது. இதனுல் விவசாயியையும் மனச்சோர்வு இன்றி உழைக்க ஊக்குவிக்கின்றது நுகர்வோரும் தாம் நுகரும் பொருட்களைத் தத்தம் கிராமங்களில் பெறும் வாய்ப்பை அளிக்கின்றது.

கூட்டுறவு இன்றி மக்கள் வாழ முடியாது. இதற்குக் காரணம் ஒற்றுமையே ஆகும். ஒற்றுமை, ஐக்கியம், கூட்டுறவு என்பன ஒரு பொருட் சொற்கள். பட்டினியின் கொடுமையால் வாழ்ந்த ஏழை மக்கள் உண்ண உணவின்றித் தவித்தார்கள், அக் காலத்திலேதான் கிராமங்கள் தோறும் கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றின; பல்கிப் பெருகின.

கூட்டுறவுக் கிராமிய அபிவிருத்தியின் முக்கியத்திற்காக ஆக்கப்பட்ட சேவை நிலையம் என்பதை யாரும் மறுக்க முடியாத உண்மையாகும் கூட்டுறவு கிராமிய அபிவிருத்தியில் ஈடுபடுவது மட்டுமல்லாமல் கிராம மக்களுக்கும் ஒற்றுமை, அன்பு, செல்வம் அனைத்தையும் வழங்குகின்ற கற்பகதரு கூட்டுறவு.

# விலைவாசிகளைக் கட்டுப்படுத்த பாவனையாளர் சம்மேளனம் கடைப்பிடிக்க வேண்டிய வழி

தேசிய கூட்டுறவு பாவனையாளர் சம்மேளனம் நாட்டின் மொத்த வியாபாரத்தில் ஆகக் குறைந்தது 15–20 விதத்தையாவது கைப்பற்ற முனைய வேண்டும். அப்பொழுது தான் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

மேற்கண்டவாறு இந்திய அரசாங்கத்தின் வர்த்தக அமைச்சர் திரு. பிரணுப் முகர்ஜி தேசிய கூட்டுறவு பாவனையாளர் சம்மேளனத்தின் வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது இந்த இலக்கை அடுத்த 10 ஆண்டுகளுக்குள் எய்துவதற்குச் சம்மேளனம் செயல் திட்டம் ஒன்றினை வகுக்க வேண்டும். தெரிவு செய்யப்பட்ட நிருவாகத்தினருக்கும் நிறைவேற்றுத் துறை உத்தியோகத்தருக்குமிடையே திட்டவட்டமான எல்லை வரையறை இருத்தல் வேண்டும்

தெரிவு செய்யப்பட்ட நிருவாகத்தினர் கொள்கைகளை வகுத்தலோடு நின்றுவிட வேண்டும் அன்றாட நடைமுறைகளிலேயோ வியாபாரத்திலேயோ அவர்கள் தலையிடக் கூடாது. பாவனையாளர்களை ஈர்க்கக் கூடிய உத்திகளைக் கையாள்வதற்கு விற்பனையாளருக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

சம்மேளன தலைவர் திரு. தபபேஷ்வாசின் பேசுகையில் பாவனைப் பொருட்களின் ஏற்றுமதி இறக்குமதி தேசிய கூட்டுறவு பாவனையாளர் சம்மேளனத்திற் கூடாக நடைபெறுவதற்கு அமைச்சர் ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். இதன் மூலம் அதிக ஆதாயமற்ற பொருள்களை விநியோகிப்பதில் பாவனையாளர் சம்மேளனம் உதவுவதற்கு வழிபிறக்கும் என அவர் சுட்டிக்காட்டினுர்

அனைத்து இந்தியாவிலிருந்தும் பாவனையாளர் சங்கப் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பில் கூட்டுறவுத் தின விழா

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் மட்டக்களப்பு மாவட்டக் குழுவும், கூட்டுறவுத் திணைக்களமும், அப்பகுதி கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்து அனைத்துலகக் கூட்டுறவுத் தினவிழாவை ஜூலை 5ந் திகதி சிறப்பாகக் கொண்டாடின.

மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கிலும், திறந்த வெளியரங்கிலும் நடைபெற்ற இவ்விழாவில் மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் திரு. சி. அம்பிகாபதியும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

அனைத்துலக கூட்டுறவுத் தினத்தையிட்டு யாழ்ப்பாணத்தில் மாவட்ட ரீதியாக நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலாவது பரிசு பெற்ற கவிதை

## கூட்டுறவால் வாழ்வோம்

அ. மகாலிங்கம்

கூட்டுறவு என்ற அந்த மக்கள் சக்தியால்
குறைகள் நீங்கிஉலகம்வாழும் நிலைமை வந்தது
நாட்டிலின்று ஏற்றத்தாழ்வு நீங்கிவிட்டதே!
நல்லவழி நமக்குவழி கூட்டுற வொன்றே!

கொள்ளை லாபம் ஈட்டிவந்த கொடுமைக்காரரை
கொடியசூழ்ச்சி யாளரான தரகர் கூட்டத்தை!
கள்ளச் சந்தை வீரரான கயவர் கூட்டத்தை !
கடிதில் அழித்து விட்டசக்தி கூட்டுற வொன்றே!

ஏழைமக்கள் தோழனாக வந்து நின்றதால்!
இல்லையென்ற கொடுமையின்று இங்குஇல்லையே
வாழவழி காட்டுமந்த வல்லசக்தியை
வாழ்த்தி நின்று சொல்லவாரீர் வையகத்தீரே!

சாதிசமயம் மொழி என்ற பேதம் நீங்கியே!
சனங்கள் நன்மை காண வேண்டும்மென்று
எண்ணியே!
ஆதியிலே ஒருவன் என்ற அறிஞன் சொல்லிய
அரிய கொள்கை ஓங்கியின்று பூமிகாக்குது

இங்கு வாழும் மனிதரெல்லாம் கூட்டுறவினுல்!
இடுக்கண் நீங்கிப் புதியவாழ்வு பெற்றுவிட்டதால்
தங்குதடை யின்றிஇந்த நாடு முன்னேறும்
தாங்கிடுவோம் கூட்டுறவுக் கொடியை வாரீரே!

முகாமைத்தரம் தவிர்ந்த ஏனைய பணியாளரிடையே மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதலாவது இடம்பெற்ற கட்டுரை.

# கூட்டுறவுப் பணியாளரிடம் சேவை மனப்பான்மை இருப்பதன் அவசியம்

ஐ. விநாயகமூர்த்தி
கட்டைவேலி, நெல்லியடி, ப நோ; கூ, சங்கம்

"கூட்டுறவு நாட்டுயர்வு" இது கூட்டுறவின் தாரக மந்திரம். நாட்டில் கூட்டுறவு வளர்வதையும் கூட்டுறவால் நாடு உயர்வதையும் எதிர்நோக்கி நிற்கின்றது இம்மந்திரம். கூட்டுறவு வளர கூட்டுணர்வு முன்னிற்க வேண்டும். கூட்டுணர்வு ஏற்பட சேவை மனப்பான்மை இருக்க வேண்டியது அவசியமாகின்றது அதாவது சேவை மனப்பான்மையின் அடிப்படையில் தான் கூட்டுணர்வு ஏற்பட முடியும்.

மக்களால், மக்களுக்காக நடத்தப்படுகின்ற இயக்கமே கூட்டுறவு இயக்கம், பொது மக்களின் நல்வாழ்வை வேண்டி நிற்கும். பொது மக்களுக்குச் சேவை புரிய விரும்பும் எந்த ஒரு இயக்கமும் பொது மக்களுடன் நல்லுறவை ஏற்படுத்தி நம்பிக்கையை வளர்த்து நல்ல அபிப்பிராயத்தைப் பெறுத வரையில் வெற்றி காண முடியாது. எனவே பொதுமக்கள் நல்லுறவினை ஏற்படுத்த சேவை மனப்பான்மைகொண்ட கூட்டுற பணியாளர்களின் உழைப்பே அவசியமானது.

கூட்டுறவுப் பணியாளர்களைப் பொறுத்தவரையில் அன்றாடம் பொதுமக்களுடன் உறவாட வேண்டியவர்கள் பொது மக்களின் குறைகளைக் கேட்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து அவர்களின் நல்வாழ்வுக்கு ஒத்தாசை புதியவேண்டியவர்கள், பொதுமக்கள் பல்வேறு தீய சக்திகளாலும் பாதிக்கப்படாது பாதுகாப்பளிக்கப்பட வேண்டியவர்கள் இவ்வாறான பணியாளர்கள் தாமுண்டு தம்பாடுண்டு என சுயநல நோக்கோடு இருந்துவிட்டால் பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றி அவர்களைக் காப்பாற்ற வேறு சக்திகளற்ற நிலையில் தீயசக்திகளின் கரங்களின் சிக்கித் தவிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுவர். எனவே கூட்டுறவின் மூலம் பொதுமக்களுக்கு எம்மாலான சேவைகளைச் செய்ய வேண்டும் என்ற அபிலாசைகளுடன் உழைப்பதே பணியாளரின் பணியாகும்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு பகுதிச் சங்கங்களும் அவ்வப்பகுதி மக்களின் பிரதிநிதிகளால் தான் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. எனவே நிருவாகத்தை நடத்துபவர்களானாலும் சரி, அங்கு கடமையாற்றும் ஊழியர்களானாலும் சரி ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அடங்குபவர்களாகவே இருப்பது சர்வ சாதாரணம். அத்தகைய நிலையில் இவர்களுக்கிடையில் ஏதோ ஒரு வகையில் உறவுத் தொடர்புகள் ஏற்படுத்துவதும் தவிர்க்க முடியாதது. இந்நிலையில் நிர்வாக இயந்திரத்தை இயக்குவதில் பல இடைஞ்சல்களும் முட்டுக் கட்டைகளும் ஏற்பட இடமுண்டு. இத்தடைகளுக்கு இடங்கொடாது தமது கடமையைச் சரிவர நிறைவேற்றி நிருவாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்க பணியாளரிடையே சேவை மனப்பான்மை மேலோங்கி நிற்க வேண்டும் என்ற கூட்டுறவுத் துறையின் எதிர்பார்பு சரியானதே.

மக்கள் வாழும் மூலை முடுக்கெல்லாம் கடமை புரியும் கூட்டுறவுப் பணியாளர்களைக் எந்நேரமும் கண்காணிக்கக் கூடிய நிர்வாக முறை இல்லாத காரணத்தால் பணியாளர்களைப் பொறுத்தவரையில் தாமைத்தாமே கண்காணிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றனர். எனவே தட்டிக்கேட்க ஆளில்லாத நிலையில் கடமையாற்றும் பணியாளர்கள் தமது கடமையை உணராது சேவை செய்யும் மனப்பான்மை இல்லாது தம்போக்கில் கடமைபுரியத் தலைப்படுவார்களேயானால், பொது மக்களின் வெறுப்பினை சம்பாதிப்பதோடு கூட்டுறவுத் துறைக்கு கெட்ட பெயரையும் அபகீர்த்தியையும் ஏற்படுத்துவதோடு நட்டத்தையும் எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் பாவனையாளருக்குத் தேவையான பொருட்களை வழங்குவதிலும் அவர்களோடு அன்பாக நடந்து தனியார் துறையினரின் சுரண்டலிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதிலும் பணியாளர்கள் தம் மகத்தான பங்களிப்பைச்செய்ய வேண்டும் என்ற பொது மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய பணியாளர்கள் தம் பணியைச் செய்ய அவர்களின் சேவை மனப்பான்மை ஏற்பட வேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

இன்று கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரையில் பொது மக்கள் எதைஎதிர்பார்க்கின்றனர்; உண்மையான நியாயமான விலையில் தமக்குத் தேவையான பொருட்களை உரிய நேரத்தில் வழங்கி தனியார் துறையினரின் சுரண்டலிலிருந்து தம்மைக் காப்பாற்ற வேண்டும் என்பதே அவர்களின் முதல் எதிர்பார்ப்பு. அவர்களின் இந்நோக்கத்தை நிறைவேற்றுகின்ற பொறுப்பு ஒவ்வொரு பணியாளரையும் சார்ந்ததாகும். ஒவ்வொரு பாவனையாளருக்கும் அவர்களுக்குத் தேவையான பாவனைப் பொருட்கள் நியாயவிலையில் கிடைக்கின்றனவா என்பதைச் சரிவரக் கண்காணிக்க முடியாத நிலையில் ஒவ்வொருபாவனையாளரின் விருப்பமும் நிறைவேற வேண்டுமானால் பணியாளர்கள் சேவை மனப்பான்மையுடன் உழைப்பதன் மூலம்தான் அதனை நிறைவேற்ற முடியும்.

கடந்த காலங்களில் கூட்டுறவுப் பணியாளர்களின் சுயநலப் போக்கினால் கூட்டுறவு இயக்கம் கள்வர் குகை என்றும் ஊழலின் இருப்பிடம் என்றும் ஓர் தவறான கருத்து மக்கள் மத்தியில் பரவியிருக்கின்றது. எனவே இத்தகைய அபகீர்த்தியைக் களைந்தெறியவும் ஊழலற்ற ஓர் இயக்கமாகக் கூட்டுறவு இயக்கம் வளரவும் இதன் மூலம் மக்கள் பயன் பெறுவதோடு இயக்கத்துக்காக மக்களும் தமது பங்களிப்பைச் செய்ய முன்வரும் நிலையினை உருவாக்கவும் பணியாளர்கள் அனைவரும் சேவைமனப்பான்மையுடன் பணிபுரிய முன்வர வேண்டும். அப்போதுதான் கூட்டுறவு இயக்கத்தின் முழு நோக்கும் பூரணத்துவம் பெற்று மிளிர முடியும்.

## உச்ச நிறுவனத்தில் அரசாங்க நியமனங்களுக்கு இடமிருக்கலாகாது

ஒரு தேசிய கூட்டுறவு நிறுவனம் நாட்டிலுள்ள கூட்டுறவு இயக்கத்தின் பிரதிநிதியாகவும், பேச்சாளராகவும் திகழவேண்டுமாயின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளே அதன் நெறியாளர் குழுவின் இடம் பெறவேண்டும். அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்களுக்கு அங்கு இடமில்லை.

தேசிய கூட்டுறவு நிறுவனங்களின் செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்த பிரதேச கருத்தரங்கு மேற்கண்ட முடிவை வற்புறுத்தியது. இக் கருத்தரங்கு அண்மையில் புதுடில்லியில் இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியத்தின் ஆதரவில் நடைபெற்றது.

தேசிய கூட்டுறவு நிறுவனத்தில் அரசாங்க உத்தியோகத்தர் தற்காலிகமாகப் பணியாற்றுவது விரும்பத்தக்கது அல்லவென்றும் ஒவ்வொரு தேசிய கூட்டுறவு நிறுவனமும் தனது சொந்த முகாமைப் பணியாளர்களை உருவாக்க வேண்டுமென்றும் கருத்தரங்கம் முடிவு செய்தது.

மேற்பார்வை, விரிவாக்கல், ஊக்குவிப்பு வேலைகள், கணக்குப்பரிசோதனை ஆகியவை தேசிய கூட்டுறவு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும் கருத்தரங்கு தகவுரை செய்தது.

## அரசியல் தலையீடு ஆராயப்பட வேண்டும்

தென்கிழக்காசிய பிரதேசத்தில் கூட்டுறவு இயக்கத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியை எந்த அளவிற்கு அரசியல் தலையீடு பாதித்துள்ளது என்பதை ஆராயும்பொருட்டு அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனம் ஓர் ஆய்வினை மேற்கொள்ள வேண்டுமென அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் தீர்மானம் நிறைவெற்றப் பட்டது.

இக் கருத்தரங்கினை இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியம் ஒழுங்கு செய்தது.

## வருடாந்த பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கத்தின் 23 வது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஆகஸ்ட் 8ந் திகதி பிற்பகல் 2 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

## மட்டக்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விழாவினையொட்டி பணியாளர்கள் மாணவர்கள் பொதுமக்கள் ஆகியோரிடையே சயிக்கல் ஓட்டப் போட்டி, படகோட்டப் போட்டி, அஞ்சலோட்டப்போட்டி, சங்கீதக் கதிரைப்போட்டி, கயிறிழுத்தல் போட்டி, விநோதஉடைப் போட்டி முதலியபோட்டிகள் நடாத்தப்பட்டன.

கூட்டுறவு வாகன அலங்காரப் பவனியும் ஊர்வலமும் இடம் பெற்றன.

மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கூட்டுறவாளர்களும் கூட்டுறவு உத்தியோகத்தர்களும் உரையாற்றினர். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## கலாநிதி சக்சேனு ராஜினாமா

அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் நெறியாளர் கலாநிதி எஸ். கே. சக்சேனு தனது நெறியாளர் பதவியைத் தனிப்பட்ட காரணங்களுக்காக இராஜினாமாச் செய்துள்ளார். 1980-ம் ஆண்டு நவம்பர் 1-ந் திகதியிலிருந்து அவரது மேற்படி இராஜினாமா அமுலுக்கு வரும்.

# போட்டிப் பொருளாதாரக் கொள்கையும் இலங்கைக் கூட்டுறவு இயக்கமும்

ஆர். எம. நாகலிங்கம்

அரசின் போட்டிப் பொருளாதாரக் கொள்கையின் விளைவாகக் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக அதிகரித்து வரும் சிக்கல் நிறைந்த சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றன. இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தின் எழுபது ஆண்டுகால வரையிலான வரலாற்றில் இன்றுள்ள நிலை மிகவும் நெருக்கடியானதொன்றாகும். சங்கங்கள் தமது பிறப்பிலிருந்து அனுபவித்துவந்த வர்த்தகச் சலுகைகளை இழந்துள்ளன. அரசின் பங்கீட்டுத் திட்டத்தின்கீழ் அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகத்தில் பெற்றிருந்த ஏகபோக உரிமையைச் சங்கங்கள் இழக்க நேர்ந்துள்ளன. பங்கீட்டுப் புத்தகங்களை மீளச் செல்லுபடியாக்கும் அரசின் திட்டத்தின்கீழ் 50% வரையிலான நாட்டு மக்கள் பங்கீட்டுப் புத்தகங்களை இழந்தமையால் 300/- ரூபாவிற்குக் குறைந்த மாதாந்த வருமானமுள்ள கொள்வனவு வலு குறைந்த நுகர்ச்சியாளர்களே பெரும்பாலும் உணவு முத்திரைத் திட்டத்தின்கீழ் அரசின் உதவித் திட்டத்தை அனுபவிக்கத் தொடர்ந்து கூட்டுறவுச் சங்கங்களைப் பயன்படுத்தி வருகின்றார்கள். இதனால் கொள்வனவு வலுவுள்ள நுகர்ச்சியாளர்களையும் பெருமளவுக்கு இழக்கக்கூடிய நிலை கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ளது. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், உணவு ஆணையாளர் திணைக்களம் ஏனைய கூட்டுத்தாபனங்கள் போன்றவற்றிலிருந்து நுகர்ச்சிப் பொருட்களைச் சலுகையுடன் பெறுவதில் இருந்த நிலையும் மாறிவிட்டது. எனவே நுகர்ச்சி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் தனியார் நிறுவனங்களுடன் போட்டிபோட்டு நுகர்ச்சியாளர்களைக் கவரக்கூடிய முறையில் சேவையாற்றாவிட்டால் தொடர்ந்து உயிர் வாழ்தல் சந்தேகத்துக்கு இடமாகிவிடும். கைத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இறக்குமதித் தடை, உற்பத்திக் கோட்டாமுறை போன்ற கொள்கைகளால் அனுபவித்து வந்த வியாபார இலாபங்களைத் தடையற்ற இறக்குமதி, உற்பத்திக் கொள்கைகளால் தொடர்ந்தும் அனுபவிக்க முடியாமற் பிரச்சினைகளுக்குள்ளாக்கி வருகின்றன. கிராமிய வங்கிகள் சேமிப்பைத் திரட்டி நிதியை வளர்த்தும், கடன் தொழிலை விரிவாக்கியும் முன்னேறுவதற்கிருந்த வாய்ப்புகள் தேசிய சேமிப்பு வங்கியும், வர்த்தக வங்கிகளும் ஏனைய நிதி நிறுவனங்களும் கடந்த சில ஆண்டுகளாகக் கையாண்டுவரும் புதுப்புது யுத்தி முறைகளால் அருகி வருகிறதென்றே பொதுவாகக் கருதவேண்டியுள்ளது. தொழிற்பாதுகாப்பின்மை சம்பளப் பற்றாக்குறை போன்ற காரணங்களால் தகுதியுள்ள பணியாளர்களின் சேவையைக் கூட்டுறவு இயக்கம் இழந்து வரும் நிலை இன்று அதிகரித்து வருகிறதென்றே கூறலாம். இவற்றைக் கவனிக்கும்பொழுது என்றுமில்லாத ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் கூட்டுறவாளர்கள் 1080ம் ஆண்டுக் கூட்டுறவாளர் தின விழாவைக் கொண்டாட வேண்டியவர்களாக இருக்கிறார்களென்றே கூறலாம்.

மாவட்ட ரீதியாகவும், சங்கங்கள் தோறும் 1980ம் ஆண்டு கூட்டுறவாளர் தினவிழாவைப் பயனுள்ள முறையில் கொண்டாடுவதற்கென திட்டங்கள் கூட்டுறவுத் திணைக்களத்தின் அங்கமாக விளங்கும் விரிவாக்கச் சேவைப் பகுதியால் தேசியக் கூட்டுறவுச் சபையின் ஒத்துழைப்புடன் முன்னேற்பாடாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கான முயற்சியில் கூட்டுறவு விரிவாக்கச் சேவைப் பகுதியும் மாவட்டத் தேசியக் கூட்டுறவுச் சபைகளும் கூட்டுறவுத் திணைக்களத்தின் மாவட்டப் பிரிவும் இணைந்து செயற்பட ஆரம்பித்துள்ளன. கூட்டுறவுச் சங்கங்களை இன்று எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்வுகாண்பதில் பொறுப்புடைய இயக்கத்தின் பங்காளிகளான கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள், பணியாளர்கள், கிளைக் குழுக்கள், பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் ஆகிய அனைவர்களையும் விழிப்படையச் செய்யும் நோக்குடன் கூட்டுறவுத் தினவிழாக் கொண்டாட்டங்கள் அமைய வேண்டியது அவசியமாகிறது. கடந்த காலப் புகழ் பாடுவதிலும், கூட்டுறவின் இலட்சியங்களை வானளாவ உச்சரிப்பதிலும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது. எதிர்நோக்கியுள்ள அச்சுறுத்தல்களைத் தீர்வு காண்பதற்குரிய வழிவகைகள் யாது? சங்கங்களை உயர்வாழச் செய்வது எப்படி? எவ்வாறு வளர்த்துச் செல்லலாம்? கூட்டுறவுச் சேவையை மேலும் மேலும் திறனுடன் அனுபவிக்க யுத்திகள் யாது? இக்கேள்விகள் கூட்டுறவு இயக்கத்தின் பங்காளிகள் ஒவ்வொருவரினதும் மனதில் எழச்செய்யவேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத ஒரு நிலை ஏற்படுமாயின் சுரண்டல்வாதிகளின் பிடிக்குள் நுகர்ச்சியாளர்களும் உற்பத்தியாளர்களும் எவ்வாறு அல்லற்பட நேரிடும் என்ற உண்மைநிலையை உணர்த்திச் செய்யவேண்டும். இதற்கு மேலாக அங்கத்தவர்களும், பணியாளர்களும், இயக்குநர்களும், கிளைக்குழு உறுப்பினர்களும் கடமை, கண்ணிய, கட்டுப்பாட்டுடன் இயக்கத்திற்குச் சேவையாற்றும் பொழுதுதான் தாங்களும் தங்களிற் தங்கியிருப்பவர்களும் உயிர் வாழமுடியும். சுரண்டற் பிடியிலிருந்து தப்ப முடியும் என்ற நம்பிக்கையுடன் செயற்படத் தூண்டவேண்டும். அவர்களைப் பாதுகாப்பதே கூட்டுறவு இயக்கத்தின் வேலை. அக்கடமையை இயக்கம் நிறைவேற்ற வேண்டுமானால், பாதுகாக்கப்படவேண்டியவர்கள் இயக்கத்தைப் பாதுகாப்பதும், வலுப்படுத்துவதும் இன்றியமையாததாகும். இச்சிந்தனை வலுப்பெற்றுவிட்டால் அதுவே சிறந்த அரணாகும் மக்களுக்கும் கூட்டுறவு இயக்கத்துக்கும் மக்களின் மனப்பாங்கு சாதகமாக அமையும்பொழுதுதான் திட்டங்கள் பயனளிக்கமுடியும்.

அச்சுறுத்தல்களைத் தவிர்க்கவும், வாய்ப்புகளைப் பயன் கொள்ளவும் சிறந்த திட்டங்கள் பற்றியும் நாம் சிந்தித்துத் தாமதிக்காமல் செயலில் இறங்கவேண்டும். ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தைப் பொறுத்தமட்டில் கூட்டுறவு மிகவும் பின்தங்கிய நிலையிலேயேயுள்ளதெனலாம். இதற் வலுவுள்ள நிறுவன ரீதியான அமைப்பு இன்றியமையாததாகும். சர்வதேச கூட்டுறவு வர்த்தக இயக்கத்தைப் பயன்படுத்தவும் வலுப்படுத்தவும் நாம் முன்வரவேண்டும். தேசிய மட்டத்திலுள்ள எமது சங்கங்கள் இத்துறையில் கூடுதலான கவனத்தைச் செலுத்தும்படி வற்புறுத்தப்படவேண்டும். அவசியமான புதிய நிறுவனங்கள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். தேவையான இடங்களில் மாவட்ட ரீதியான நிறுவனங்கள் அமைக்கப்படுவது பிரயோசனமுடையதாகும். வடமாகாண மீன்பிடிச் சங்கங்களின் சமாசம் கடந்த பல ஆண்டுகளாகக் கடல் வளங்களை ஏற்றுமதி செய்வதில் முன்னேற்றம் கண்டதுபோல மாவட்டங்களுக்குச் சிறப்பான உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தச் சிறப்பு இயங்கள் கூடுதலான பலனை அளிக்க முடியும். உதாரணமாக வவுனியா மாவட்டத்தில் உற்பத்தியாகும் உழுந்து உற்பத்தியை அதிகரிக்கவும், சேகரித்துக் களஞ்சியப்படுத்தி ஏற்றுமதி செய்யவும், உள்ளூர்ச் சந்தைக்கு அப்பளம், உழுத்தம்மா உணவு போன்றவற்றைத் தயாரிக்கவும், அம்மாவட்டத்திலுள்ள ஒரு சங்கம் பொறுப்பேற்கலாம் அல்லது எல்லாச் சங்கங்களும் சேர்ந்து ஒரு நிறுவனத்தை ஏற்படுத்திப் பயன் கொள்ளலாம். யாழ் மாவட்டத்தில் கூட்டுறவு மூலம் மிலதறி, கைத்தறிப் புடவை உற்பத்தி பெருமளவுக்கு இடம் பெறுவதால் ஏற்றுமதிக்கு ஏற்ற தயார் உடை தயாரிப்புப் போன்ற முயற்சிகளில் யாழ்ப்பாண மாவட்டப் புடவைக் கூட்டுறவுச் சங்கம் ஈடுபட்டு அப்பகுதிப் புடவை உற்பத்திக்குப் பாதுகாப்பு அளிக்க முன்வரவேண்டும். கைப்பணிப் பொருட்கள், பழவகைகள் போன்ற உற்பத்திப் பொருட்களை மாவட்ட ரீதியாகச் சேர்த்து ஏற்றுமதி செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் முன்வரவேண்டும்.

இறக்குமதியைப் பொறுத்தமட்டிலும் தேசிய ரீதியான அமைப்புத் தேவை. கூட்டுறவுச் சங்கங்கள் நுகர்ச்சித் தேவைகளைப் போட்டிப்பாட்டு நிறைவேற்ற இறக்குமதியிலும் கவனம் செலுத்த வேண்டும்: அவசியம் ஏற்படும்பொழுது மாவட்டங்களுக்குச் சிறப்பாகத் தேவைப்படும் பொருட்களைச் சங்கங்கள் கூட்டாக இறக்குமதி செய்ய முயற்சிக்க வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே நிறுவன ரீதியான கூட்டுறவை வலுப்படுத்த என்றுமில்லாதளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். மாவட்டங்களுக்கிடையேயுள்ள சங்கங்களுக்கிடையே கூட்டுறவுண்டா? அயலிலுள்ள சங்கங்களுக்கிடையே கூட்டுறவுண்டா? இக்கூட்டுறவு மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது. மாவட்ட ரீதியாக கூட்டுறவு வியாபார உற்பத்தி நடவடிக்கைகளை வளர்ப்பதற்கேற்ற கூட்டுறவு இணைப்புச் சபைகள் தேவை. இந்த இணைப்புச் சபைகள் மாவட்டங்களுக்குத் தேவையான கொள்வனவுகளை ஓரளவுச் சிக்கனத்துடன் கொள்வனவு செய்யவும் வாகனப் போக்குவரத்துகளை இணைத்துப் பயன் கொள்ளவும் முடியும். ஒரு சங்கத்தின் உற்பத்திப் பொருளை மாவட்டத்திலுள்ள ஏனைய சங்கங்கள் மூலம் சந்தைப்படுத்த மாவட்ட இணைப்பு உதவவேண்டும். மாவட்ட ரீதியாக ஏற்படுத்தப்படும் கூட்டுறவு இணைப்புச் சபைகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து இயங்கவேண்டும். இதன்மூலம் ஒரு மாவட்டத்திலுள்ள உற்பத்திப் பொருட்களை இன்னொரு மாவட்டத்துக்கு மாற்றி உற்பத்தியாளரும் நுகர்ச்சியாளரும் பயன்கொள்ளச் செய்யவேண்டும். பொருள் கிடைப்பு, விலை, இடங்கள், போக்கு வரத்து வசதிகள் போன்ற சந்தைத் தகவல்களைச் சுடச்சுடப் பெற்றுத் தீர்மானங்களை எடுக்கவும் இணைப்புமுறை பயனளிக்க வேண்டும். உழுந்து, பயறு, சோயா, சோளம், புளி, உருளைக்கிழங்கு, வெங்காயம், எள்ளு நிலக்கடலை போன்ற உற்பத்திப் பொருட்கள் எப்போ எங்கே அறுவடையாகும் என்ற தகவல்களை முன்னேற்பாடாக அறிந்து பயன் கொள்ளாத கூட்டுறவுச் சங்கங்களைப் பாதுகாக்க இணைப்பு முறை உதவும். சங்கங்களின் வாகனங்கள் வாகன வெற்றோட்டங்களை தவிர்த்து மக்களுக்குப் பயன்படச்செய்ய இணைப்பு முறை உதவலாம். இணைப்புச் சங்கங்கள் பலப்படும் பொழுது வர்த்தக, உற்பத்தியில் மட்டுமல்லாமல் லாமல் கூட்டுறவாளர்களுக்கிடையே மனுஷீகரீதியான நல்லெண்ண வளர்ச்சிக்கும், தேசிய ஒற்றுமைக்கும் பெரும் பங்களிக்கும்.

கைத்தொழில் உற்பத்தியைப் பொறுத்த மட்டில் கூட்டுறவின் பங்களிப்பு நோக்காகப் பின்தங்கிய நிலையிற்றான் உண்டெனக் கூறலாம். வவுனியா, கல்முனை, மட்டக்களப்பு, மன்னார், பரந்தன் போன்ற மாவட்டங்களைக் குறிப்பாக நோக்கும் பொழுது நிலைமை மேலும் தெளிவாகவும், ஒவ்வொரு ப. நோ. கூ. சங்கமும் திட்டமிட்டு ஒரு குறித்த பொருள் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி பெற முடியுமென்றால் அச்சங்கம் அம்மாவட்டத்திலுள்ள ஏனைய சங்கங்களுக்கு அப்பொருளை விநியோகிக்கும் உற்பத்தியாளராகத் தொழிற்படலாம். இவ்வாறு ஒவ்வொரு ப. நோ. கூ. சங்கமும் ஈடுபடும் பொழுது ஒவ்வொரு மாவட்டத்திலும் பல கூட்டுறவுக் கைத்தொழிற்சாலைகள் உருவாக முடியும். உதாரணமாக யாழ்ப்பாணத்திலுள்ள 22 ப. நோ. கூ. சங்கமும் தனித்தனி ஒவ்வொரு கைத்தொழிலில் ஈடுபட முடியுமென்றால் 21 புதிய கைத்தொழில் நிலையங்களை இயங்கச் செய்து அம்மாவட்டத்துக்குத் தேவையான நுகர்ச்சித் தேவையையும் நிறைவேற்ற உதவலாம். கோழித்தீனுக்குப் பெரும் தட்டுப்பாடிருந்தும் அவ் உற்பத்தியில் சங்கங்கள் கவனம் செலுத்திவருவதாகத் தெரியவில்லை. நெருப்புப் பெட்டித் தொழிற்சாலையொன்றை இயக்க முடியாத நிலைக்கு ஒரு ப. நோ. கூ. சங்கம் தள்ளப்பட்டுள்ளது. நல்ல தென்னை நாற்றுகளைப் பெறச் சங்கங்கள் உதவுவதாகக் காணவில்லை. கால்நடை வளர்ப்பில் சங்கங்கள் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

கூட்டுறவுச் சங்கங்களின் நோக்கம் வியாபாரத்தைப் பெருக்கி இலாபத்தை உழைப்பதுடன் நின்றுவிடக்

(தொடர்ச்சி 8 ம் பக்கம்)

(முற்றுெடர்)

வளாமுக நாடுகளிலே உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் விசேட அபிவிருத்திப் பிரச்சினைகள் தோன்றும் போது அவற்றைச் சமாளிக்கக்கூடிய நிலையில் தம்மைத் தயார்ப் படுத்திக் கொள்ளவில்லை. எடுத்துக் காட்டாக தொழில் நுட்ப மாற்றம், அடிப்படைத் தேவைகள் போன்ற பிரச்சினைகளை அவர்களால் சமாளிக்க முடியாமல் இருந்தமை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். இயற்கை அழிவுகளைப் பொறுத்தவரையிலும் இதுவே உண்மை நிலை ஆனால் இத்தகைய அழிவுகளால் கிராமப்புற மக்களின் பிழைப்பு வெகுவாகப். பாதிக்கப்படுவதனுல் கூட்டுறவு முறையிலே மனித முயற்சியையும் வள ஆதாரங்களையும் ஒன்று திரட்டுவதற்கு திட்டவட்டமான ஊக்குவிப்பு இருத்தல் சொல்லாமலே விளங்கும். எனவே இத்துறையில் மனிதவள ஆதாரங்களை ஒன்றுதிரட்டுவது அவ்வளவு கடினமாக இருக்கமுடியாது.

# மூன்றும் உலகில் இயற்கை அழிவுகள்

கூட்டுறவு சார்ந்த திட்டத்தின் கீழ் அரசாங்கங்கள் மூலதனத்தையும், இயந்திர சாதனங்களையும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதோடு இயற்கை அழிவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய தொழில் திட்ப நுட்பங்களையு கற்றுக் கொடுக்கலாம். கூட்டுறவுச் சங்கங்கள் தொழில் சக்தியைத் திரட்டி வழங்குவதன் மூலம் திட்டங்களின் செலவினங்களைக் குறைக்க உதவலாம், இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாகப் பெரும்பாலும் இருப்பார்கள் என்பதால் அடிமட்ட தொழில் நுட்ப அறிவு ஊற்றுக கூட்டுறவுச் சங்கங்கள் விளங்குகின்றன.

**பிறுங் லோன்**

மேலும் இத்தகைய நடைமுறைகள் கிராமபபுறத் திட்டமிடலில் அடிமட் பங்கு பற்றலுக்கு வழிகோலும். உணவு விவசாய நிறுவனமும், அனைத்துலக தொழில் நிறுவனமும் கிராமப்புற அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றி பெற வேண்டுமாயின் கிராமப் புற மக்களின் பங்கு பற்றல் இன்றியமையாதது என்பதை வற்புறுத்தி வந்திருக்கின்றன.

சீனுவின் முன்மாதிரியிலிருந்து இயற்கை அழிவுகளுக்கு உட்பட்டு வரும் நாடுகள் நன்மை பெறலாம். இயற்கை அழிவுகளைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதில் எவ்வளவு தாமதம் ஏற்படுகின்றதோ அந்தளவிற்கு மூன்றும் உலகின் கிராமப்புற நல் வாழ்விற்கும், விவசாயத்துக்கும் குந்தகம் ஏற்படக்கூடிய ஆபத்து பெருகுகின்றது; இயற்கை அழிவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளபபடும் எந்தவொரு பயனுள்ள திட்டத்தினதும வெற்றி இதில் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ள மக்களின் ஆதரவிலேயே தங்கியிருக்கின்றது. இங்குதான் கிராமப்புறச் சங்கங்களின் பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. (முற்றும்)

(முற்றுெடர்)

# கிராமியக் கொடுகடன்

நெற் பயிர் காப்புறுதித் திட்டங்கள் 1958-லிருந்து (ஏதோ ஒரு உருவில்) இயங்கிவந்திருக்கின்றன. இந்த வருடத்தில் மகா பருவத்தின்போது ஒரு முன்மாதிரித் திட்டத்துக்காக, 5 மாவட்டங்களில் 26,000 ஏக்கர் நிலம்காப்புறுதிக்காகத் தெரிவு செய்யப்பட்டது. 1962—63 பருவத்தில் 11 மாவட்டங்களில் 65000, ஏக்கர் நிலம் காப்புறுதியின் கீழ் வந்தது. இது மேலும் விஸ்தரிக்கப்பட்டு. 1973—74 மகா பருவத்தில் 16 மாவட்டங்களில் 200,000 ஏக்கர் நிலம் காப்புறுதி செய்யப்பட்டது.

எழுபதுக்களின் ஆரம்பத்தில் இக்காப்புறுதி அமைப்பில் சில பிரதான குறைபாடுகள் கண்டறியப்பட்டன. சேகரிக்கப்பட்ட தவணைப் பணம் மிகக் குறைவாக இருந்த அதே வேளையில், வழங்கப்பட்ட நட்ட ஈடுகள் மிகக் கூடுதலாக இருந்தன. இதனையடுத்து 1973ன் விவசாயக் காப்புறுதிச் சட்டம் அறிமுகம் செய்யப் பட்டது. நெல்லுக்கான கட்டாயக் காப்புறுதி அமைப்பொன்றை இது தாபித்தது. இவ்வமைப்பை அமுல் நடத்தும் பொறுப்பு விவசாயக் காப்புறுதிச் சபையிடம் ஒப்படைக்கப் பட்டது. தவணைப் பணத்தின் அளவு பிராந்திய ரீதியில் நிர்ணயிக்கப்பட்டது. புதிய அணுகுமுறையுடன் கூடியஇந்தத் திட்டம் 1975 கால பருவம் முதல் இயங்க ஆரம்பித்தது. நெல் உற்பத்தியின் கீழ் இருக்கும் சகல பகுதிகளும் இத் திட்டத்தின்கீழ் வருமென எதிர்பார்க்கப்பட்டது.

முன்னைய முறை, காப்புறுதி அலகாக குடியிருப்பாளரையே கருதியது. புதிய முறையின் பிரகாரம்பயிர்ச் செய்கைக்குழுப்பிரதேசமே காப்புறுதி அலகாக கணிக்கப்பட்டது. தனிப்பட்ட விவசாயிகள் பயிர்ச்செய்கைக் குழுவில் தமது பெயரைப் பதிவுசெய்து, காப்புறுதி நோக்கங்களுக்காக தமது நிலங்களைச் சேர்த்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. பழைய காப்புறுதித் திட்டம் சுமார் 900,000 காப்புறுதி செய்யப்பட்ட அலகுகளைக் கையாளவேண்டி இருந்ததற்குப் பதிலாக, புதிய திட்டம் 5600 அலகுகளை மட்டுமே கையாளவேண்டி ஏற்பட்டது பயிர்ச் செய்கைக் குழுவின் விவசாய உற்பத்திக் கமிட்டி விவசாயியுடன் நேரடித் தொடர்புகளை வைத்துக்கொள்ளவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள் அனுமதிக்கப்பட்ட பின்னர், காப்புறுதித் தவணைப் பணங்களை அக்கூட்டுறவுச் சங்கங்கள் சேகரித்து அப் பிரதேசத்தின் விவசாய உற்பத்தி நிலையத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். ஒரு பருவத்துக்கு ஒரு ஏக்கருக்கான தவணைப பணம் ரூ. 8/- லிருந்து ரூ. 20/- வரையிலிருக்கும் காப்புறுதிச் சபை குறித்த பிரதேசத்தின் விவசாய உற்பத்தி நிலையத்துடன் கலந்தாலோசித்து தவணைப் பணஅளவினை நிர்ணயம் செய்யும், 1976-ல் தவணைப்பண வீதங்கள் திருத்தியமைக்கப்பட்டு 1976-77 மகா பருக்கப்பட்டிருக்கின்றது இப்புது முறையின் நன்மை தீமைகளைப் பொறுத்திருந்தே அவதானிக்க வேண்டும்.

காப்புறுதியினுல் பாதுகாப்புப்பெற்ற நிலப்பரப்பளவு தொடர்ந்தும் குறைவாகவே இருந்து வந்துள்ளது. 1976—77 மகா போகத்தின் போதுகூட மொத்தச்சாகுபடி நிலப்பரப்பில் 22 சதவீதம் மட்டுமே காப்புறுதி செய்யப்படடிருந்தது இப்பருவத்தில் திரட்டப்பட்ட தவணைப் பணம் மொத்த இலக்கில் 20 சத வீதமாக இருந்ததுடன். முன்னைய வருடத்தை விடவும் எல்லாரீதியிலான

தீர்த்து விடுவதில் கொடுகடன் கொள்கைகள் மட்டும் தனித்து வெற்றி பெறப்போவதில்லை என்பதைக் காண முடிகின்றது காலனித்துவத்தின் ஆரம்ப நாட்களில் தேசத்தின் பொருளாதாரம் இரட்டைத் தன்மை வாய்ந்த அமைப்பாக மாறியதிலிருந்தே கிராமியத்துறையில் மிகச் சிக்கலான பல அடிப்படைப் பிரச்சினைகள் தோன்றி வளர்ச்சியடைந்து வந்துள்ளன குத்தகை அமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவரும் விவசாயச் சீர்திருத்தங்கள், கிராமிய நிறுவனங்களின் அபிவிருத்தி என்பவற்றினல் மட்டுமே இப் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்துவிட முடியும்.

கிராமியத்துறைக்கான கொடுகடன், விவசாய அபிவிருத்திக் கொள்கையுடன் வைத்து நோக்கப்படு

## வரலாற்றுப் பின்னணியும் பிரச்சினையும்

இந்த ஏற்பாடானது. கிராம மட்டத்தில் பலவித மான முறைகேடுகளுக்கு வழி வகுத்தது கண்டறியப் பட்டது. அரசியல் சார்பு நிலைகள் காரணமாக, சில ''விவசாயிகள்'' பயிர்ச் செய்கைக் குழுவின் காப்புறுதிப் பதிவேட்டில் தமது பெயர்களையும் சேர்க்கச் செய்து நட்ட ஈடுகளைப் பெற்றுக்கொள்ள முயன்றனர். இதன் விளைவாக, காப்புறுதிச்சபை பல சந்தர்ப்பங்களில் நட்ட ஈடு வழங்க மறுத்துள்ளது.

புதிய காப்புறுதித் திட்டம் 1975-ல் அமுல் செய்யப்பட்டதன்பின். விவசாயக் கடன் வழங்கும் நிறுவனங்கள் காப்புறுதியைக் கட்டாயப்படுத்தின. தனிப்வத்தில் புது வீதங்கள் அறிமுகஞ் செய்யப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்களுக்கு விவசாயக் கடன்கள் வழங்கப்படும்போது. சாகுபடி நிலம் முழுவதும் காப்புறுதி செய்யபபட்டிருக்கின்றதா என்பதை வங்கி கவனித்தல் வேண்டும். தற்பேதைய 1978—79 மகா பருவத்துக்கு விவசாயக் கடன்களைக் கோரும் விவசாயிகள் மிகக் கூடிய கட்டாய தவணைப் பணம்—அதாவது ஏனையவர்களை விடவும் மூன்று மடங்கு—செலுத்த வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விவசாயக் கடன்களை மீள அறவிடுதலில் மிக மோசமான அனுபவங்களை பெற்றிருக்கும் வங்கிகளின் வற்புறுத்தலின் பேரிலேயே இந்த உயர் வீதம் நிர்ணயி

குறைஐவயும் காட்டியது. 1977 கால பருவத்தில் 8 சத வீதமான நிலப்பரப்பே காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. மேலும், திரட்டப்படட தவணைப் பணம் மொத்த இலக்கில் 9 சத வீதமாக இருந்ததுடன், முன்னைய யால பருவத்தை விடக் குறைவாகவும் இருந்தது.

காப்புறுதித் திட்டத்தின் ஆரம்ப வருடங்கள் கடுமையான வறட்சிகளால் பாதிக்கப்பட்டவை என்பதை மனதில் இருத்திக் கொள்ளல் வேண்டும். 1976-ன் பின்னர் நிலைமைகள் சாதகமாக மாற்றமடைந்ததுடன், காப்புறுதித் திட்டம் (அதன் குறைபாடுகளுக்கு மத்தியிலும்) சற்று நம்பிக்கையூட்டிவதாகத் தென்படுகின்றது.

நாம் இதுகாறும் கூறியவற்றைத் தொகுத்து நோக்கும்போது, கிராமியத் துறையின் பிரச்சினைகளைத் தல்வேண்டும். கொடுகடன் அமைப்பு சிறப்பான முறையில் இயங்குவதற்கு சமூக பொது முதலீட்டுத் தேவைகள் நிறுவன அமைப்புக்கள் என்பன முன்னியந்தனைகளாகும். விருத்தியாக்கப்பட்ட தொழில் நுட்பம், விஸ்தரிப்புச் சேவைகள், நீர்ப்பாசன அமைப்புக்கள் போக்கு வரத்து வசதிகள், சந்தைப்படுத்து வசதிகள் என்பன பொருத்தமான முறையில் கிடைக்கும் ஒரு பின்னணியிலேயே கொடுகடன், விவசாயம் என்பன தாக்கமானவையாக அமைய முடியும்.

கிராமியக் கொடுகடன் பிரச்சினையின் பிறிதொரு அம்சம் நுகர்வுத் தேவைகளுக்கான கடன்களாகும். நுகர்வுத் தேவைகளுக்கு நிறுவன ரீதியான கடன்கள் வழங்கப்படுவதில்லை. பலவருடங்களாகக் கொடுகடன் நிறுவனங்கள் உற்

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

(முற்றொடர்)

# பல்தேச வணிக கூட்டுத்தாபனங்களும் கூட்டுறவுக் கொள்கைகளும்

போல் டெறிக்

**உள்ளூர் பங்குதாரர்; தேசியமயமாக்குதல்**

பல்தேச வணிகக் கூட்டுத்தாபனங்கள் பற்றி ஆராய்ந்த உலக நாடுகள் சபை ஆணைக்குழு சொத்துரிமை, கட்டுப்பாடு ஆகிய பிரச்சினைகள் மிக முக்கியமானவை என சுட்டிக்காட்டியுள்ளது இக்கூட்டுத்தாபனங்களின் உள்ளூர் கிளைகளிலோ அந்தந்த நாட்டு அரசாங்கமோ அல்லது அரசாங்க முகவரோ அல்லது தனிப்பட்ட உள்ளூர்க்காரரோ, கம்பெனிகளோ பங்குகளைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என விதிப்பது ஒரு வழி. எடுத்துக்காட்டாக இந்திய அரசாங்கம் 1973 லிருந்து இந்தியக் கம்பெனிகளிலே பல்தேச வணிகக் கூட்டுத்தாபனங்களின் பங்குகள் படிப்படியாக 40 வீதத்திற்குக் குறைக்கப்பட வேண்டுமென விதித்துள்ளது. மெக்சிகோவிலே உள்ளூர் பங்குதாரரே பெரும்பான்மையினராக இருக்க வேண்டுமென அரசாங்கம் விதித்துள்ளது. எனினும் பெரும்பாலான பல்தேச வணிகக் கூட்டுத்தாபனங்கள் குறிப்பாக அமெரிக்க கூட்டுத்தாபனங்கள் கிளைகளின் பங்குகள் யாவற்றையும் தமதாக்கிக் கொள்ளவே விரும்புகின்றன.

பல்தேச கூட்டுத்தாபனத்தின் கிளையிலே பங்குகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் உள்ளூர் அரசாங்கத்திற்கு கிளையின் செயற்பாடுகளில் ஓரளவு செல்வாக்கு ஏற்படுகின்றது. இதற்கு அதிகம் தேவைப்படுவதனால் ஆரம்பத்திலிருந்தே உள்ளூர்ப் பங்குதாரரின் விகிதாசாரத்தை திட்ட வட்டமாக வரையறுப்பதற்குப் பதிலாக படிப்படியாக உள்ளூர்ப் பங்குதாரரின் ஈடுபாடு அதிகரிக்க வேண்டுமென சில வளர்முக நாடுகள் விரும்புகின்றன.

பல்தேச வணிக கூட்டுத் தாபனத்தின் உள்ளூர் கிளையை தேசியமயமாக்குதல் இன்னொரு வழி இறைமையுள்ள அரசுகள் தமது ஆட்சிப் பரப்பிலே தொழிற்படும் கம்பனிகளை தேசியமயமாக்கி அவற்றின் பங்குதாரருக்கு நியாயமான நட்ட ஈடு வழங்க சட்டப்படி உரிமை வாய்ந்தவை என்பதை எல்லா அரசாங்கங்களும் ஒப்புக் கொள்கின்றன எனினும் நட்ட ஈடாக வழங்கப்பட வேண்டிய தொகையைப் பற்றியும் அதை யார் நிர்ணயிக்க வேண்டும் என்பதைப் பற்றியும் சர்ச்சைகள் எழுகின்றன இது மிகவும் சர்ச்சைக்குரிய விடயம் என்று உலக நாடுகள் சபையின் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நீதித்துறையைச் சார்ந்த தமது அதிகாரிகள் நியாயமான நட்ட ஈட்டை நிர்ணயிப்பதற்குத் தகுதி வாய்ந்தவர்களென சில வளர்முகநாடுகளின் அரசாங்கங்கள் வாதிடுகின்றன.

மறுபுறம் கைத்தொழில் மய நாடுகளின் அரசாங்கங்கள் சர்வதேச மத்தியஸ்தத்தின் மூலமே நியாயமான நட்ட ஈட்டை நிர்ணயிக்கலாமென வாதிடுகின்றன, எதேச்சாதிகாரமாக சொத்துக்கள் பறிமுதலாகலாம் என்ற பயம் சர்வதேச முதலீட்டிற்குத் தடங்கலாக இருந்து வருவதால் இவ்விடயத்திலே சர்வதேச உடன்பாட்டை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பகிரங்கக் கம்பெனியின் பங்குகளை ஓர் அரசாங்கம் கொள்வனவு செய்யும் போது சந்தை விலையைக் கொடுத்தே அவ்வாறு செய்கின்றது ஆனல் பல்தேச வணிக கூட்டுத்தாபனத்தின் உள்ளூர் கிளையின் பங்குகளை ஓர் அரசாங்கம் வலுக்கட்டாயமாகச் சுவீகரிக்கும்போது அவற்றிற்காகச் செலுத்தப்பட வேண்டிய பணத்தைப் பற்றி கருத்து வேறுபாடு நிலவுவது இயல்பே

(வளரும்)

# கூட்டுறவு இயக்கத்தின் தனிப்பண்பு

பேராசிரியர் ஜோர்ஜ் லசேரி
பாரிஸ் பல்கலைக்கழகம்

**உழவரின் மனப்பாங்கு**

உழவனும் தொழிலுக்கு வந்தனை செய்கின்றான். உழவுத் தொழில் ஏன் மிக உன்னதமானதென அவன் கருதுகின்றான். ஏனெனில் அதில் ஈடுபடும்போது மனிதன் இயற்கையோடு ஒத்துழைப்பதால்.

அவனுடைய அடிப்படை விழுமியங்களில் ஒன்று குடும்பம் இதைச்சுற்றி பாரம்பரிய அறவொழுக்கத்தின் மீது இறுக்கமான பற்றை அவன் கொண்டிருக்கின்றான். உழவனின் தனிமனித வாதம் உண்மையில் ஒரு வகையில் குடும்ப தேசிய எனலாம். குடும்பம், கிராமம், தேசம் ஆகியவற்றைச் சுற்றியே ஒருமை உணர்வு [illegible]றது. தன்விருப்பார்ந்த அமைப்புக்களைப் பொறுத்தவரையில் இந்த உணர்வு அவ்வளவாகத் தென்படுவதில்லை.

**வியாபார மனப்பான்மை**

நடுத்தர வர்க்கம் அனுபவிக்கும் சலுகைகளைத் தொழிலாளர் தமதாக்கிக் கொள்ள விரும்பினுல் நடுத்தர வர்க்கத்தின் பணிகளையும், பொறுப்புக்களையும், நற்பண்புகளையும் தொழிலாளர் கையேற்க வேண்டும் அப்பொழுது தான் அழிவு ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்

பூர்சுவா வர்க்கத்தினருக்கும் அவர்களுக்கே உரிய மனப்பாங்கும் ஒழுக்கமும் உண்டு. இங்கு எமது அக்கறையை ஈர்ப்பது வியாபார ஒழுக்கமே. இவ்வொழுக்க முறையின் பல அம்சங்கள் பெறுமதி வாய்ந்தவை வியாபார முயற்சியின் வெற்றிக்கு இன்றியமையாதவை.

முதலாவதாகக் குறிப்பிடவேண்டியது பொறுப்புணர்வு. தொழில் முனைவன் தனக்கு பொருள்களையும், சேவைகளையும் வழங்குபவனுக்கு தக்க நியம் வழங்க வேண்டும் அவன் தனது கடமைப்பாடுகளை மறத்தலாகாது இத்தகைய பொறுப்புணர்வே பெரும் வணிகத் தலைவர்களின் சிறப்பை உருவாக்க உதவுகின்றது. இத்தகைய பொறுப்புணர்வை எய்துவதற்கு எத்தனையோ ஆற்றல்களும், விதிகளும் தேவைப்படுகின்றன, இவற்றின் தொகுப்பே செம்மையான முகாமை

கடும் தூய்மை வாதிகள் கடைப்பிடித்த ஒழுக்க முறை நடுத்தர வர்க்கத்தினரின் வெற்றியிலே பெரும் பங்கினை வகித்தது

முகாமை அல்லது அறிவு சார்ந்த தொழில் கௌரவிக்கப்பட்டது செலவினங்கள் மிகவும் கௌரவமாகக் கட்டுப்படுத்தப்பட்டன அன்று தொட்டுத்தான் சிக்கனம் ஒரு நற்பண்பாகக் கணிக்கப்பட்டு பேணப்பட்டு வந்தது. ஆனல் இன்றைய நுகர்ச்சிக சமூகத்தில பூர்சுவா வர்க்க ஒழுக்கத்தின் இந்த அம்சம் செல்வாக்கிழந்து குறைந்துவருகின்றது

கூட்டுறவு மனப்பான்மை தொழிலாளியின் சமூக நிலைப்பட்ட மனச்சான்றுக் கூறுகளையும் நடுத்தர வர்க்கத்தின் ஒழுக்கக் கூறுகளையும் நுட்பமாக இணைத்து சம நிலைப் படுத்தியுள்ளது. சமூக நிலைப்பட்ட மனச்சான்றுக்கும், வியாபாரத் திறமைக்கும் இடையே ஒற்றுமை எப்பொழுதும் நிலவும் என்பதற்கில்லை அவற்றிற்கிடையேயுள்ள பொருத்தப்பாடு இன்மையே 'கோட்பாட்டு நிலைப்பட்ட' தலைவர்களுக்கும், 'முகாமை நிலைப்பட்ட' தலைவர்களுக்குமிடையே முரண்பாடுகளை கூட்டுறவு நிறுவனங்களிலே தோற்றுவிக்கின்றன. மனச்சான்றுக்கும், வியாபார வெற்றிக்குமிடையே சமநிலை பேணப்படவேண்டும்; இவற்றின் முரணிலே எழும்பிரச்சினைகள் எதிர்கொள்ளப்படல் வேண்டும்

(வளரும்)

(6 ம் பக்கத் தொடர்ச்சி)

# கிராமியக் கொடுகடன்...

பத்தித் தேவைகளுக்காக மட்டுமே கடன்களை வழங்கி வந்திருக்கின்றன. நுகர்வுக் கடன்களை வழங்குவதில் கிராமிய வங்கிகள் ஓரளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளன. எனினும், சேமிப்புக்களை ஒன்று திரட்டும் அவற்றின் ஆற்றலிலேயே கொடுகடன் நடவடிக்கைகளின் விஸ்தரிப்பு தங்கியிருக்கின்றது.

உற்பத்திக்கடன், நுகர்வுக்கடன் என கடன்களை வகை பிரிப்பதும், கடனை உற்பத்தி நோக்கத்துக்காக மட்டும் கட்டுப்படுத்துவதும் பல சந்தர்ப்பங்களில் உற்பத்தி முயற்சிக்கு ஊறு விளைவிப்பதாக இருந்து வந்துள்ளது. நுகர்வுத் தேவை மிக முக்கியமானதாகும். அவை நிறைவு செய்யப்படாத பட்சத்தில் ஒன்றில் உற்பத்திக் கடன் நுகர்வுத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும். அல்லது உற்பத்திக் கடன் பொருளாக வழங்கப்படும் பட்சத்தில், விவசாயியின் நுகர்வுக் கடன் பொறுப்பு. உற்பத்திக் கடனைத் தாக்கமற்றதாக்கி விடும்.

கொடுகடன் பற்றிய விவாதத்தில் சில தெளிவான எடுகோள்கள் பாவிக்கப்படுவதுண்டு; அதாவது நிறுவன ரீதியான கடன் "நல்லது" என்றும், நிறுவன ரீதியற்ற கடன் "மோசமானது" என்றும் கருதப்பட்டு வருகின்றது. நிறுவனங்கள் குறைந்த வட்டி வீதங்களையும், ஏனைய கடன் கொடுப்போர் உயர் வட்டி வீதங்களையும் அறவிடுவதாகக் கூறப்படுகின்றது. ஆனல் உழவர் விவசாயிகள இப்படி உணர்வதில்லை. அவர்களைப் பொறுத்தவரையில், நிறுவன ரீதியற்ற கடன் மூலம், நெகிழ்ந்து கொடுக்கக்கூடியதாகவும், நுகர்வுத் தேவைகளுக்கு கடன் வழங்குவதாகவும் செலவு குறைந்த கொடுக்கல் வாங்கல் முறைகளைக் கொண்டதாகவும் இருக்கின்றது மேலும் நிறுவன ரீதியற்ற சில மூலங்கள் குறைந்த வட்டி வீதங்களை அறவிடுகின்றன. அல்லது வட்டி அறவிடுவதே இல்லை.

"நிறுவன ரீதியான துறை நிறுவன ரீதியற்ற துறைக்கு கடன்களை வழங்க வேண்டும் என்பது பலருக்கு ஒரு முரண்பாடான கருதாகத் தென்படலாம் ஆனல், நிறுவன ரீதியற்ற துறையில் திரவத்தன்மை அதிகரிக்கும்போது. கொடுகடன் நடவடிக்கைகளில் கடன் கொடுப்பவர்களிடையே போட்டி ஏற்பட்டு வட்டி வீதங்கள் குறைவடையும்" என்று அண்மையில் ஒரு பொருளியல் அறிஞர் குறிப்பிட்டார். கிராமியத்துறையில் இத்தகைய நிலைமைகளின் கீழ் இயங்குவதற்கு நிறுவன ரீதியற்ற துறைக்கு வசதிகள் வழங்கப்படுமாயின், இக்கொள்கை அதன் நோக்கங்களில் வெற்றி பெற முடியும். மறுபுறத்தில் நிறுவன ரீதியான துறையின் வெற்றி. நிறுவன ரீதியற்ற துறையுடன் தொடர்பு கொள்ளும் அதன் ஆற்றலிலேயே தங்கியிருக்கின்றது.

(முற்றும்)

# தேசீய கூட்டுறவு நிறுவனங்களின் செயற்திறமையை எவ்வாறு மேம்படுத்தலாம்

ந்தக் கருத்தரங்கைப் பொறுத்தவரை தேசிய கூட்டுறவு நிறுவனம் என்ற பதம் ஒரு குறிப்பிட்ட கூட்டுறவு இயக்கத்தின் உச்ச நிறுவனத்தைக் குறிக்கும் இத்தகைய நிறுவனத்தில் அந்தத் துறையைச் சார்ந்த பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ இடம் பெறுகின்றன ஒரு தேசிய கூட்டுறவு நிறுவனத்தின் பணிகளைப் பொதுப்படையாக பின்வருமாறு வகுக்கலாம்:

1. தேசிய, சர்வதேச மட்டங்களில் கூட்டுறவு இயக்கத்தை பிரதிநிதித்துவம் செய்தல்

2 இயக்கத்தை ஊக்குவித்தல்

3. கூட்டுறவுக் கொள்கைகள், நடைமுறைகள் பற்றி மக்களுக்குக் கல்வி புகட்டுதல்.

## தென்கிழக்காசியாவின் கூட்டுறவு நிறுவனங்கள்

அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் தென்கிழக்காசிய பிரதேசத்தைச் சார்ந்த பெரும்பாலான நாடுகளில்-ஈரான் முதல் கிழக்கும் ஜப்பான், அவுஸ்திரேலியா வரை ஒரே யொரு கூட்டுறவு இயக்கம் தான் உண்டு வேறு சில நாடுகளிலே இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டுறவு இயக்கங்கள் உண்டு இவற்றில் ஒவ்வொரு இயக்கத்திற்கும் தனக்கே உரிய தேசிய கூட்டுறவு நிறுவனம் உண்டு. ஆனால், இவையெல்லாம் அனைத்துலக கூட்டுறவு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டிருக்கின்றன. வேறுசில நாடுகளிலே தேசிய கூட்டுறவு நிறுவனம் என்ற ஒன்று இல்லை எனினும், வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவனத்துடன் தொடர்புற்றிருக்கின்றன.

தேசிய கூட்டுறவு நிறுவனங்களின் செயற் திறமையை மேம்படுத்துவதற்கு பின்வருவன இன்றியமையாதன:

.1 தன்னாட்சி சட்ட உரிமை.

2 நிதி சுதந்திரம்.

3. ஆற்றல் மிக்க சுதந்திரமான தலைவர்கள்.

4. திறமைமிக்க முகாமை.

### தன்னாட்சி சட்ட உரிமை

செயற்திறமையுள்ள ஒரு நிறுவனமாக ஒரு தேசிய கூட்டுறவு நிறுவனம் திகழ வேண்டுமாயின் அது சட்டப்படி தன்னாட்சியுரிமை பெற்ற ஒன்றாக இருத்தல் வேண்டும் கூட்டுறவுக் கொள்கைகளுக்கு அமைவாக இயங்குவதற்கு அதற்குள்ள உரிமை மீறப்படலாகாது. இதன் தாற்பரியத்தைப் பின்வருமாறு விரித்துரைக்கலாம்:

1. தன் விருப்பார்ந்த முறையில் இணையும் உரிமை அதாவது ஒரு குறிப்பிட்ட சங்கத்தை உறுப்பினராகச் சேர்ப்பதா இல்லையா எனத் தீர்மானிக்கும் உரிமை ஒரு தேசிய கூட்டுறவு நிறுவனத்திற்கு இருத்தல் வேண்டும். ஒரு சங்கத்தை உறுப்பினராக அனுமதிக்கவேண்டுமென்றோ அல்லது ஒரு சங்கம் உறுப்பினராகச் சேரவேண்டுமென்றோ நிர்ப்பந்திக்கும் எத்தகைய சட்டமும் இருத்தலாகாது.

2. உறுப்பினர்களால் ஜனநாயக முறைப்படி தெரிந்து செய்த திருவாகத்தின் மூலம் தனது சொந்த அலுவல்களை நடாத்தும் உரிமை.

3. சர்வதேச கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட வேறு கூட்டுறவுச் சங்கங்களுடன் ஒத்துழைக்கும் உரிமை.

4. தகுந்த தனது உறுப்புக்களால் தயாரிக்கப்பட்ட கல்வி, பயிற்சித் திட்டங்களைச் செயற்படுத்தும் உரிமை ஒழிவு மறைவின்றி எந்தவித தடையுமின்றி கூட்டுறவைக் கற்பிப்பதற்கு உரிமை இருத்தல் வேண்டும், கூட்டுறவுச் சங்கங்களைக் கட்டுப்படுத்தும் சட்டங்களோ அரசாங்கத்தின் நடவடிக்கைகளோ அவை எவையாக இருப்பினும் கூட்டுறவுக் கொள்கைகளுக்கு அமைவாக இல்லாதவிடத்து அவற்றை விமர்சிக்கும் உரிமை மட்டுப்படுத்தப்படலாகாது.

5. தேசிய, சர்வதேச மட்டத்தில் கூட்டுறவு இயக்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் உரிமை.

பதவி வழி மூலமோ நியமனம் மூலமோ தேசிய கூட்டுறவு நிறுவனத்தின் தலைவரை உருவாக்குதல் கூட்டுறவுக் கொள்கைகளுக்கு அமைவானதல்ல. எனவே, இதற்கு வழிவகுக்கும் விதியோ உபவிதியோ இருத்தலாகாது மேலும், தேசிய கூட்டுறவு நிறுவனத்தின் நெறியாளர்களையோ நிறைவேற்றத்துறை அதிகாரிகளையோ வேறு ஊழியர்களையோ நியமிப்பதற்கான ஏற்பாடுகளும் இருத்தலாகாது.

பதவிவழி அல்லது நியமன நெறியாளர்கள் தம்மை நியமித்தவர்களின் பிரதிநிதிகளாக இருத்தல் வேண்டுமே ஒழிய தேசிய கூட்டுறவு நிறுவனத்தை பிரதிநிதித்துவம் செய்தலாகாது கூட்டுறவு இயக்கத்தின் நலவுரிமைகளைப் பாதுகாக்கும் தேவையேற்படும்போது ஒரு தேசிய கூட்டுறவு நிறுவனம் சுதந்திரமாகச் செயற்படவேண்டும். தலைவரோ நெறியாளர்களோ உயர் நிறைவேற்றுத்துறை அதிகாரிகளோ அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவராயிருப்பின் இத்தகைய செயற் சுதந்திரம் இருக்காது.

தேசிய கூட்டுறவு நிறுவனத்தின் யாப்பு அதன் உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டுமே ஒழிய அரசினால் திணிக்கப்பட்ட ஒன்றாக இருத்தலாகாது. அரசாங்க சட்டத்தினால் ஆக்கப்பட்ட யாப்பைக் கொண்டுள்ள ஒரு தேசிய கூட்டுறவு நிறுவனம் உண்மையில் ஒரு கூட்டுறவு நிறுவனம் அல்ல. தனது உறுப்பினர்களின் ஜனநாயக விருப்பிலிருந்து அது பிறக்காததால் நாம் ஏற்றுக்கொள்ளும் அர்த்தத்தில் அது தேசிய கூட்டுறவு நிறுவனம் அல்ல. இத்தகைய நிறுவனத்தின் யாப்பை உறுப்பினர்கள் விரும்பினும் மாற்ற முடியாது. நாட்டின் ஆட்சிமன்றத்திற்குத் தான் அந்த உரிமை உண்டு. உண்மையான அர்த்தத்தில் ஒரு தேசிய கூட்டுறவு நிறுவனம் தன்னாட்சி சட்ட உரிமை வாய்ந்த ஒன்றாக இருத்தல் வேண்டும்

(வளரும்)

---

முன்னாள் இலங்கையில் கூட்டுறவு ஆக்க ஆணையாளராகவும், அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் தென்கிழக்காசி பிரதேச நெறியாளராகவும் கடமையாற்றிய திரு. வீரமன் கருத்தரங்கு ஒன்றில் சமர்ப்பித்த கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

ஆ-ர்

---

கூட்டுறவுக் குரல்

## கூட்டுறவு விழா நினைவு

— பண்டிதர் க. யோ. ஆசிநாதர்

கூட்டுறவு இயக்கமொன்றே குவலயத்தில்
கூட்டுமட்டும் வளர்ச்சியுற்ற இயக்கமாகும்
ஏட்டளவில் பேச்சளவில் நின்றிடாது
எடுப்பாகச் செயலாற்றும் இயக்கமாகும்
மேட்டிமையாய்க் கிராம முதல் நகர்கள் தோறும்
மிகுகதியில் படர்ந்துவரும் இயக்கமாகும்
கோட்பாடாய்க் கைக்கொள்ளும் இயக்கமாகும்
கொள்கைநலம் குன்றாத இயக்கமாகும்
கேட்ட வற்றுள் பேரியக்கம்; பெருமைதானே
கைகோர்த்துப் பெருவிழாவாய்ப் போற்று-
வோமே!

அகிலத்தும் வாழுகின்ற மனித சீவர்
அனைவருமே அறிந்திருக்கும் கூட்டுழைப்பைப்
பகிரங்க மாகஎல்லாத் தேயத் தாரும்
பாராட்டிப் பங்குகொளும் பான்மையான
புதிரான கூட்டுறவுச் சேவை போலும்
பொதுஇயக்கம் பூவுலகிற் கண்டதில்லை
விதியாக ஐம்பதெட்டாண்டு கால
விழாவயதைக் கூட்டுறவு கண்டதன்றோ!

ஆண்டாண்டு தோறும்வரும் ஆடிமாதம்
அனைத்துலகக் கூட்டுறவு நினைவு மாதம்
மாண்புமிகு மனிதகுல வளமைக் காக
வழிவகுக்க வாய்ப்பளிக்கும் காலமாகும்
மூண்டுவரும் பிறவிழாக்கள் கண்டிடாத
மூத்தவிழா கூட்டுறவு விழாவொன்றுகும்
யாண்டுபல வாகிடினும் நிலைத்து நிற்கும்
கூட்டுறவு இயக்கமிதைப் பேணிக்காப்போம்.

விழாவெடுக்க ஒருதினமோ கிழமை காணோ
வெகுமாத காலமதும் வேண்டு மாமோ?
அலாதிதரு மியக்கமிதை ஆட்சி யாக்க
அதியுழைப்பின் அவசியத்தை உணர்கின்றோமா?
நிலாவலைய விளக்கேற்ற விரைகின்றோமா?
நீடித்த பணிபுரிய நினைக்கின்றோமா?
துலா வெனவே சீர்தூக்கிப் பார்க்கின்றோமா?
தூங்காது கூட்டுறவைக் காக்கின்றோமா?

சாதிமத இனகுலத்துச் சழக்கை யெல்லாம்
சமூகத்திற் சரித்துவிட்டுச் சமவா யத்தில்
நீதிமுறைத் தத்துவத்தில் நிலைக்கச் செய்யும்
நீடாயுள் ஒத்துழைப்பை விரும்பி ஏற்போம்
வீதிமனை கிராமமெல்லாம் விளங்கச் செய்வோம்
விதைக்கும்விதை பயிராகி வளரச் செய்வோம்
பாதிவழி தரியாது பணிகள் செய்வோம்
பார்புகழக் கூட்டுறவை மிளிரச் செய்வோம்.

---

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

## போட்டிப் பொருளாதார ...

கூடாது. அங்கத்தவர்களின் பொருளாதாரத்தை வளர்த்தல் பொருட்டுத் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தல், நிதி வழங்கல் சந்தைப்படுத்தல், சிக்கனமாகச் செலவு பண்ணச் செய்தல், மிச்சம் பிடிக்க உதவல், சேமிப்பை வளர்த்தல் ஆகிய துறைகளில் வெற்றி கண்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதை இறுதி நோக்கமாகக் கொண்டு செயல்படவேண்டும். எனவே, திட்டங்கள் இதனை நோக்காகக் கொள்ளவேண்டும்.

கூட்டுறவாளர் தின விழாவை முன்னிட்டுக் கூட்டுறவாளர்களின் சிந்தனைக்கு இக்கருத்துகளைச் சமர்ப்பிக்கிறேன்.

[பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டி மேற்பிரிவில் முதலாவது இடம்பெற்ற கட்டுரை]

# கூட்டுறவும் சமுதாய முன்னேற்றமும்

வேணுராதா கார்மேகசுந்தரம்

''ஒன்றுபட்டால் உண்டு
வாழ்வே— நம்மில்
ஒற்றுமை நீங்கில்

அனைவருக்கும் தாழ்வே'' என்ற உத்தமமான கொள்கையை மக்களிடையே பரப்புவதுதான் கூட்டுறவு இயக்கத்தின் பிரதான நோக்கமாகும். கூட்டுறவின் தந்தை எனப்படும் ரொபேட் ஒவன இக் கொள்கைக்குவித்திட்டார் சமுத்தை நெரிக்கும் போட்டி மலிந்துள்ளது. இக்கால உலகத்திலே தனிப்பட்டவர்கள் ஒருவரொடொருவர் போட்டியிட்டு மல்லாடுவதிலும் பார்க்க உயர்ந்ததும் சிறந்ததுமான கொள்கைகளையும் இலட்சியங்களையும் ஒன்றுபட்டு உழைப்பதன் மூலமே பெற முடியும். இந்த வகையில் பார்க்கப் போனால் கூட்டுறவு இயக்கம் ஜனநாயகத்தின் அடிப்படையான கொள்கையொன்றைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதைக் காணலாம். அதாவது தனிப்பட்டவர் சமூகத்துக்காக உழைப்பார். சமூகம் தனி நபர் நலனைக் கருதி உழைக்கும் என்பதே. இவ்வாறு கூட்டுறவினால் சமுதாய முன்னேற்றம் ஏற்படவாய்ப்புண்டாகிறது.

ஏழைகளுக்கு உதவி செய்வதே கூட்டுறவு இயக்கத்தின் முதலாவது நோக்கமாகும் கள்ளச்சந்தையில் விற்பனை. நடத்துவோரிடமிருந்தும் சிறிய கடைக்காரரிடமிருந்தும் மக்களைக் காப்பாற்றுவதே. அதன் பெருநோக்கமாகும் இரண்டாவது வறுமையில்கிடந்து துடிக்கும் கிராம வாசிகளை இலங்கையின் வரண்ட பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் விவசாய திட்டங்கள் மூலமும் குடியேற்றத்திட்டங்கள் மூலமும் விடுதலை பெற உதவி செய்வது இவ்வாறு கூட்டுறவு இயக்கம் சமூகத்திலுள்ளமக்களின் முன்னேற்றம் கருதி உழைக்கும் இயக்கமாகத் திகழ்கின்றது.

பணம் படைத்த முதலாளிகளின்வியாபாரம் போன்றதல்ல கூட்டுறவு வியாபாரம் போன்றதல் கூட்டுறவு வியாபாரம். வாழ்க்கையில் வசதிகளைப் பெறாத வறிய மக்களின் நலன்களைக் காப்பாற்ற முயலும் இலாபம் கருதாத ஒரு கூட்டுறவு முறை இதில் அடங்கியிருக்கின்றது. இங்கு இலாபம் பெற வேண்டும் என்ற நோக்கமும் போட்டி மனப்பான்மையும் கிடையாது. கூட்டுறவு சிறந்த வியாபாரத்தை அடிப்படையாகக் கொண்டது மட்டுமன்றி உயர்ந்த கொள்கையையும் கொண்டுள்ளது. சமுதாய முன்னேற்றம் கருதும் ஒரு ஆட்சிமுறையின் தன்மையை இக் கூட்டுறவு இயக்கம் கொண்டிருக்கின்றது வாழ்க்கை வசதிகளைப் பெறாத மக்களின் நலன்களைக்காப்பாற்றுவதற்காக பொறுப்பு வாய்ந்த பெருமக்களால் நடாத்தப்படும் இயக்கமே கூட்டுறவு இயக்கம்.

கூட்டுறவு என்பது ஜனநாயக தத்துவங்களை மனிதர் பயின்று கொள்வதற்கேற்ற சாதனமாகும் பொறுப்புவாய்ந்த பிரஜைகளாக மக்களை இவ்வியக்கம் பயிற்றுகின்றது தனிப்பட்டவர்கள் உற்சாகத்துடனும் ஜாக்கிரதையுடனும் இருக்கப் பழக்குகின்றது, சமூக நலனைப் பற்றிய உணர்ச்சியை இது வளர்க்கிறது. ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களிடையே நட்பையும் பரஸ்பர நல்லெண்ண விருத்தியையும் இது வளர்க்கின்றது அத்துடன் வறிய மக்களின் பொருளாதார நிலையை மேலும் உயர்த்துகின்றது. நல்ல குடிகளாக மக்கள் பொறுப்புணர்ச்சியோடு காரியங்களைச் செய்யப பழக்குகின்றது இவ்வாறு கூட்டுறவு இயக்கம் சமுதாய முன்னேற்றம் கருதி உழைக்கும் ஒரு சிறந்த இயக்கமாகத் திகழ்கின்றது,

பணமில்லாதவர்கள் ஒன்று சேர்ந்து வியாபாரம் நடத்துவதற்கு ஏற்படுத்தப்பட்டதே கூட்டுறவுச் சங்கம். இது சுயநலப் பற்றற்ற முறையில் நடத்தப்படும். இதில பங்குபற்றுவோர் சங்கத்தைப் பயன்படுத்தும் அளவுக்கு இலாபத்தையடைவார்கள்'' என்று கூட்டுறவு பற்றி ஓர் அறிஞர் கூறியிருக்கின்றார். கடன் கொடுக்கும் இலேவாதேவிக்காரர், கள்ளச்சந்தையில் விற்பனை நடத்துவோர் ஆகியோரின் சுரண்டல் சூழ்ச்சிகளிலிருந்து தப்புவதற்கு சங்க அங்கத்தவர் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும் ஒற்றுமையோடு கருமங்களைச் செய்தால் தான் நற்பலன் கிடைக்கும். பொது நன்மையை வளர்ப்பதற்கு அவர்கள சங்கத்தைப் பயன் படுத்த வேண்டும் கூட்டுறவு வங்கிகளும் கடன் சங்கங்களும் தனிப்பட்ட உற்பத்தியாளருக்கு நியாயமான வட்டியில் பணம் கடன் கொடுக்கின்றன. கடனாளியின்பேரில் உள்ள நம்பிக்கையின் பேரிலேயே கடன் கொடுபடுகின்றது. கடன் எடுத்த பணத்தை அவர் ஆக்க முயற்சியில் பயன்படுத்த வேண்டும். அதனால் வரும் இலாபத்தைக் கொண்டு வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த வேண்டும். அப்போதுதான் கூட்டுறவு வங்கிகள் அதனைக்கொண்டு மற்றவர்களுக்கும் கடன் உதவி செயயலாம் கடன் வாங்கியவர்கள் சுயநலமற்ற முறையில் பொது நன்மை கருதிச் செயற்படவேண்டும். இவ்வாறு கூட்டுறவு இயக்கம் சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகின்றது.

கமைய சமூக பொருளாதார நலன்களைப் பேணுவதுடன ஒருவர்க்கொருவர் உதவுவதால் கூட்டுறவு வழியில் சமுதாயம் முன்னேற்றமடையும் உணவுற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்கு நவீன முறைகளைப் பாவிப்பதுடன் கூட்டுறவின் தந்தையெனப் போற்றப்படும் ''ரொபெர்ட் ஓவனின்' கூட்டுறவுக் கொள்கைகளும் அடிப்படையாகப் பல நாடுகளில் கையாளப்படுகின்றது. ஜனத்தொகையில் ஏறத்தாழ 80 கோடியைக் கொண்ட மக்கள் சீனக் குடியரசு மலர்ந்த 25 வருடகதினுள் சுயதேவைப் பூர்த்தியுடன் ஏற்றுமதி செய்வதற்கும் கூட்டுறவே வழி வகுத்தது பொதுவுடமை நாடுகள் பல கூட்டுறவினடிப்படையில் முன்னேறியுள்ளன கூட்டுறவின் மூலம் நாட்டுயர்வை ஏற்படுத்தலாம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

உணவுப் பொருள் உற்பதி மட்டுமன்று உற்பத்திப் பொருட்களைப பங்கீடு செய்வதும் அவசியமே உற்பத்திப் பொருட் பங்கீட்டில் மட்டுமல்லாமல் உணவு உற்பத்திக்கு உதவக் கூடிய விதை, தானியங்கள் கிருமி நாசினிகள், இயந்திரங்கள் என்பனவற்றை விநியோகிப்பதிலும் உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வதிலும் விற்பனையிலும் உணவுப் பொருட்களைப் பங்கிடுவதிலும் கூட்டுறவு சங்கங்கள் உழைத்து வருகின்றன. அது மட்டுமன்றி கடன் வசதிகளை மக்களுக்கு அளிப்பதிலும் இவை ஈடுபட்டு வருகின்றன. பதுக்கல்நோக்குடன் கூடிய சங்கங்களாகத் திகழாது மக்களுடைய பலவிதமான தேவைகளையும் கூட்டுறவினடிப்படையில் நிறைவேற்றவே சங்கங்கள் இயங்குகின்றன. இவ்வாறு கூட்டுறவு இயக்கம் சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதில் பெரும் பங்கு வகித்து வருகின்றது

கூட்டுறவு அடிப்படையில் இன்றைய சமுதாயப் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்தி அதன் மூலம் வேலையில்லாப் பிரச்சினையையும் உணவுப் பற்றாக்குறையையும் தீர்க்க முடியும் ஒற்றுமையுடன் எல்லோரும் சேர்ந்து கூட்டுறவினடிப்படையில்உழைத்தால் நாட்டில் பசுமைப் புரட்சி ஏற்படும் இது நிறைவிளைவு, சமுதாய நீதி, வினைத்திறன் என்பனவற்றை குறிக்கோளாகக் கொண்டமையும். இன்றைய சமுதாயப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு சமுதாயம் முன்னேற்றமடைய கூட்டுறவே சிறந்த தீர்வுக் கருவியாகும், இதனைச் சரியான முறையில் வழிநடத்தி நிருவகித்து நீதி வழங்குவதால் சமுதாய முன்னேற்றம் துரித கதியில் விளையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கூட்டுறவே
நாட்டுயர்வாகும்!

நமது நாட்டின் பொருளாதாரத்தில் குறிப்பாக கிராம விருத்தியில் கூட்டுறவின் பங்கு முக்கியமானதாகும். பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களில் கூட்டுறவு நிறுவனங்களில் பெரும் பங்காற்றுவதனை நாம் உற்று நோக்கலாம். கூட்டுறவின் மூலமாக குடிசைக் கைத்தொழில்களும் தைத்தொழிற் கூடங்களும் அரசினால்பாதுகாத்து அபிவிருத்தி செய்யப்படுகின்றது. கூட்டுறவின் மூலமாக கூட்டுறவுக் கொள்கைகளுக்

## நல்ல வளர்ச்சி

அனைத்துலகக் கூட்டுறவுத்தின விழாவை முன்னிட்டு தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம் மகளிர் பாவனையாளர் கல்வித் திட்ட அங்கத்தவர்களிடையே கடந்த வியாழக்கிழமை நடாத்திய சத்தூட்ட உணவுப்போட்டியை மேற்படி கல்வித்திட்ட இயக்குநர் செல்வி ஜயந்தா தென்னக்கூன் ஆரம்பித்து வைத்துப பேசுகையில். பாவனையாளர் கல்வித்திட்டம் இங் சங்கத்தில் தொடங்கி வைத்த காலத்திலிருந்து இன்று வரை நல்ல வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

மாலை மேற்படி மகளிர் கல்வித்திட்டத்தைச் சேர்ந்த மகளிரிடையேநாடகப் போட்டி நடாததப்பட்டது. இப்போட்டியில் கவனத்தை ஈர்க்கும் வகையில் சிறந்த நாடகங்களை மகளிர் நடித்துப் பாராட்டுக்கள் பெற்றனர்.

இப்போட்டியில் ''ஏளனம் செய்யாதே'' என்ற நாடகம் முதலாவது இடத்தையும் 'விடிவை நோக்கி' என்ற நாடகம் இரண்டாவது இடத்தையும், 'மலர்ந்த வாழ்வு' என்ற நாடகம் மூன்றுவது இடத்தையும் பெற்றன.

## கூட்டுறவுச் சங்...

2ம் பக்கத் தொடர்ச்சி

குவிப்பு எனக் கருதப்படும் சிருடை சிறந்த பணியாளர் தெரிவு போன்றவை அமுலிலிருத்தல் வேண்டும். சிறந்த பணியாளர்கள் தெரிவு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சகல பகுதியிலும் நடைபெற வேண்டும். மேலும் போட்டிகள் போன்றவை அவ்வப்போது நடாத்தப்பட்டுச் சிறப்பிக்கவேண்டும்.

மேலும் தாபனத்தின் நிலையும் பணியாளர்களின் சேவைத்தரமும் காலத்திற்குக்காலம் கணிக்கப்படல் வேண்டும். இதற்காகச் சங்கங்களின் ஆணையாளரும் பதிவாளரும் ஒரு எண்பார்வையை நடாத்துகின்றார்கள் இது அனேகமாக இன்று கணக்கு வைத்தலுடன் முடிவடைந்து விடுகின்றது. இது விரிவாக்கப்பட்டு விற்பனைப் பெருக்குதல் கிளைகளின் தொடர்பு, அலுவலக முகாமை போன்றவற்றிலும் திட்டங்கள் தீர்மானங்கள் என்பவற்றை நிறைவேற்றுதல் போன்றவற்றிற்கும் தனித்தனி அறிக்கைகள் சமர்ப்பித்தல் வேண்டும்.

கட்டுப்படுத்தல் என்பது இந்த அறிக்கைகளை மையமாக வைத்தது அதன் குறைபாடுகளை அவதானித்து அதைத் திருத்துவதாகவும். மேலும் அவ்வாறான பிழைகள் ஏற்படாமல் தடுப்பதாகவும் அமையவேண்டும்.

# கூட்டுறவு ஆசிரியர்களுக்கான வெளிக்களப்பயிற்சித் (அனுபவம்) திட்டம்

திட்டத்தின் செயற்பாட்டை அவதானிப்பதற்கும், ஆசிரியர்களுக்கு ஆதரவையும் வழிகாட்டலையும் வழங்குவதற்கும் தொழில் நுடப ஆலோசகர்களுக்கிடையே பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. வழிகாட்டலை வழங்குவதோடு பயிற்சிச் சாதனங்களையும் இவர்கள் கொடுத்து உதவுகின்றனர். அத்துடன் இவர்கள் கலந்துரையாடல்களில் பங்கு பற்றுகின்றனர், தெரிந்தெடுக்கப்பட்ட சங்கங்களுக்கு பயிற்சித் திட்டங்களை வகுத்து நடாத்துகின்றனர், ஆசிரியர்களுடைய பணிகளை ஒன்றிணைக்கின்றனர். ந்த தொழில் நுட்ப ஆலோசகர்கள் கூட்டுறவு கல்வி நிலையங்களுக்கும், தெரிந்தெடுக்கப்பட்ட சங்கங்களுக்கு ஒழுங்காகச் சென்று அவற்றைப் பார்வையிடுகின்றனர்.

'சங்கங்களைத் தத்தெடுத்தல்'

வெளிக்களப்பயிற்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக நான்கு மாவட்டங்களிலிருந்தும் ஒவ்வொரு சங்கத்தை செய்திட்டம் தத்தெடுத்துள்ளது. சம்பந்தப்பட்ட கல்வி நிலையங்களின் ஆசிரியர்களுடைய உதவியோடு இச்சங்கங்களிலே தீவிரமான ஒரு திட்டத்தைச் செயற்படுத்துவதே இதன் நோக்கமாகும். ப. நோ. கூ. சங்கங்களின் ஆள் சேர்ப்புத் திட்டத்தின்படி கல்வி, பயிற்சி அலுவலர்களை பெரும்பாலான சங்கங்கள் தேர்ந்தெடுத்துள்ளன. இந்த அலுவலர்கள் சங்கப்பணியாளர்களின் பயிற்சியைக் கவனிப்பதோடு பொது உறுப்பினர்களுக்கான கூட்டுறவுக் கல்வித் திட்டங்களையும் உருவாக்க வேண்டும். இந்தக் கல்வி உத்தியோகத்தர்களுக்கு ங்கமே தனது சொந்த வருமானத்திலிருந்தே ஊதியம் வழங்கவேண்டும். தேசிய கூட்டுறவுச் சபையின் மாவட்டக் கல்வி நிலையங்களினதும் கூட்டுறவுத் திணைக்களத்தின் விரிவாக்கல் கிளையினதும் தொழில்நுட்ப உதவியையும், ஆதரவையும் இந்த அலுவலர் பெறுவர்.

இந்தக் கல்வி அலுவலர்களுக்குச் செம்மையான தொழில நுட்ப வழிகாட்டலையும், ஆதரவையும் வழங்கும் பொருட்டு தத்தெடுக்கப்பட்ட சங்கங்களின் ஆசிரியர்களுடன் சேர்த்து அவர்களுக்கான பயிற்சித்திட்டங்களை வகுப்பதற்கு செய்திட்டம் தயாராக உள்ளது. எனவே, ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ப நோ. கூ சங்கத்தைத் 'தத்தெடுத்து' இச் சங்கங்களில் பணியாற்றும் கல்வி அலுவலர் பயிற்சித் திட்டங்களிலே சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

திட்டமிடல் சங்கப்பணியாளர்களின் பயிற்சித் தேவைகளை இனங்காணுதல், பயிற்சிச் சாதனங்களை வழங்குதல், பயிற்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உதவுதல், உறுபபினர் கல்விக்கு உகந்த பயிற்சித் திட்டங்களை உருவாக்குதல் போன்ற துறைகளிலே ந்தக் கல்வி அலுவலருக்கு தொழி நுட்ப வழிகாட்டலை வழங்க செய்திட்டம் தயாராக உள்ளது.

### யாழ் மாவட்டத்தில் வெளிக்களப் பயிற்சித் திட்டம்

யாழ் மாவட்டத்திலே வெளிக்களப்பயிற்சித் (அனுபவம்) திட்டம் நவம்பர் 97ல் ஆரம்பிக்கப்பட்டது. மாவட்ட கூட்டுறவு கல்வி நிலையங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் பின் வரும் சங்கங்களைக் கவனிக்கின்றனர்:

(1) திரு. எம். பத்நிநாதன் வலி கிழக்கு தெனபகுதி ப. நோ. கூ. ச. நீர்வேலி

(2) திரு. இ. சுப்பிரமணியம் நல்லூர் ப. நோ கூ. ச. திருநெல்வேலி

(3) திருமதி ஏ. தவபாலசிங்கம் தெல்லிப்பளை பநோகூ ச. தெல்லிப்பளை

(4) திரு மு. சுகந்தசீலன் மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ ச.

(5) திரு பி சண்முகசுந்தரம் சங்கானை ப நோ. கூ. ச சங்கானை

யாழ்ப்பாணம் தேசிய கூட்டுறவுச் சபையினதும், யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரி விரிவுரையாளர்களினதும் உற்சாகமான ஒத்துழைப்புடன் வெளிக்களப் பயிற்சித் திட்டத்தின் வளர்ச்சி அவதானிக்கப்பட்டு வருகின்றது. சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுடன் செம்மையான தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. ஞானப்பிரகாசத்தினதும் விரிவாக்கல் உத்தியோகத்தர் திரு. கனகசிங்கத்தினதும் ஒத்துழைப்பு பெரிதும் உதவியிருக்கின்றது. இந்த இரு உத்தியோகத்தர்களும் செய்திட்ட தொழில் நுட்ப ஆலோசகர்களுடன் தெரிந்தெடுக்கப்பட்ட சங்கங்களுக்குச் சென்று அவற்றைப் பார்வையிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் தேசிய கூட்டுறவுச் சபையின் மாவட்டக் குழுவும் இவ் வெளிக்களப் பயிற்சித் திட்டத்திற்கு பல வகையில் உதவி வருகின்றனர்.

(வளரும்)

தமணபிரகாஷ்
தொழில் நுட்ப ஆலோசகர்
கூட்டுறவு ஆசிரியர் பயிற்சித் திட்டம்

---

( அனைத்துலக கூட்டுறவு தினத்தையொட்டி ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையால் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கவிதை. ]

## கூட்டுறவை வளர்ப்போம

செ. சிவானந்ததேவன் —

வான்நோக்கின் சுதந்திரமாய் மகிழ்ந்து பாடி
வட்டமிடும் பறவைகளின் வாழ்வும் மற்றும்
கான்நோக்கின் தம்மினத்தைக் கலந்து கூடிக்
களிப்பெய்தும் கானவாழ்வோர் கூட்டும். கொம்புத்
தேன்நோக்கின் மொய்த்தொன்றாய்ச் சேர்ந்து வாழும்
தேனீக்கள் தெரிவுறுத்தும் தெளிந்த கூற்றும்
வான்நோக்கி வாழ்வுயர வளர்ந்து நிற்கும்
வலிமையுறு கூட்டுறவின் பெருமை சாற்றும்!

சமதர்மம் என்பதனைச் சேற்றுள் மூடிச்
சாமான்கள் விலையெல்லாம் சிகர மேற்றித்
தமதுகுறைப் பேழைதனை நிறைக்க என்றும்
தயங்காத பணமுதலைத் தலைகள் குன்ற
நமது குறை நிறைவுகளை நன்றாய் ஆய்ந்து
நல்லுறவால் சமூகமெனும இல்லம் வேய்ந்து
எமதுகுறை தனைப்போக்கும் இயக்கம் வேறு
எங்களது கூட்டுறவுக் கிணையாய் எங்கே?

நாட்டுயர்வே நம்முயர்வு என்று போற்றி
நல்லகமம் செய்வோர்தம் நலனைப் பேணி
காட்டுகின்ற ஊக்கத்தால், வாட்டி யெம்மைக்
கரிக்கின்ற பசிப்பிணியைக் கருணை யோடு
ஓட்டிவரும ஓரியக்கம் என்பர் '' ரொபேட்
ஓவ ''னென்பார் பெற்றெடுத்து உலகுக் கீந்த
கூட்டுறவு இயக்கமிதைக் குலவிக் கூடிக்
குவலயத்தில் குறைவின்றி வாழ்வோம் நாமே!

நியாயமுறக் கைத்தொழிலும் கமமும் ஓங்க
நேர்மையெனும் நல்வழியில் நின்று நித்தம்
சகாயவிலை கொடுத்தரிய பொருட்கள் பெற்றுச்
சாதிமத பிரிவின்றிச் சமமாய் யார்க்கும்
தயாளமுடன் தருகின்ற இயக்கம் என்றும்
தர்மத்தின் நெறிதன்னில் தயங்கா நின்றும்
தியாகங்கள் பலபுரிந்து தரணி போற்றத்
திகழ்கின்ற கூட்டுறவை வாழ்த்து வோமே!

சொல்லரிய நன்மை பல செய்தே, நாளும்
செகம்போற்ற உயர்வுற்றுத் திகழ்ந்த போதும்
நல்லதொரு மரத்திற்புல் லுருவி போன்றே
நீசர்பலர் படர்ந்துள்ளார் நஞ்சர் இன்றேல்
இல்லதொரு குறையிந்த இயக்கம் தன்னில்
என்றென்றும் கூட்டுறவு இயக்கம் மண்ணில்
வல்லதொரு நல்லுறவாய் வளர்ந்து வாழ
வாழ்வெல்லாம் தாங்களதை வாழ்த்து வோமே!

---

# உச்ச நிறுவனம் இரு முகங்களைக் கொண்டது

தேசிய கூட்டுறவு ஒன்றியம் போன்ற கூட்டுறவு இயக்கத்தின் உச்ச நிறுவனங்களுக்கு உண்மையில் இரு முகங்கள் உள. உச்ச நிறுவனத்தின் ஒரு முகம் உள்நோக்கியவாறு அமைந்திருக்கிறது இயக்கத்தின் தேவைகளை இனங்கண்டு வெளிப்படுத்துவதுதான் இதன் பணி மற்ற முகம் வெளியேயுள்ள சமுதாயத்தை நோக்கியவாறு அமைந்திருக்கிறது. இயக்கத்திற்குச் சாதகமாகச் சமுதாயத்தை மாற்றியமைக்கும் பணி இதனுடையது

மேற்கண்டவாறு அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் நெறியாளர் கலாநிதி எஸ். கே. சக்சேனா அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற பிரதேசக் கருத்தரங்கு ஒன்றினை ஆரம்பித்து வைக்கையில் குறிப்பிட்டார்

இக்கருத்தரங்கினை இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியமும் அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனமும், தென்கிழக்காசிய பிரதேச அலுவலகமும் கூட்டாக ஒழுங்கு செய்திருந்து இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவர் திரு பி எஸ் விஸ்வநாதன் தலைமை தாங்கினார்.

பங்களாதேஷ், இந்தியா ஈரான் கோரியா, மலேசியா, நேபாளம், சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இக் கருத்தரங்கில் பங்குபற்றினர்.

# சுவடுகள்

## ஒளிமயமான அன்பு காண்போம்

கதிர்காமத்திர்த்தத்திற்கு அடியார்கள் பக்தி பரவசத்துடன் நவீன வசதியுள்ள பஸ்களிலும், வான்களிலும் எப்போதெல்லாம் தினமும் அரோகரா ஒலியுடன் சென்று கொண்டிருப்பதைப் பற்றிப் பேசிய ஒரு நண்பர், கதிர்காமத் திருவிழாக் காலத்திலே தான் சோதனைகளும் வந்து விடுகிறதென்று குறிப்பிட்டார். அதை வைத்து ஒரு கருத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

அகந்தையை அழித்து தனது அருளொளியால் தூய்மைப் படுத்துபவர் முருகப்பெருமான். தத்துவங்கடந்த தத்துவப் பொருளான முருகப் பெருமான் மீது அருளாளர் கண்ட தத்துவம் இதுவாகும்.

நாம் அகந்தையை மனத்தில் வைத்திருக்கும்வரை கஷ்டங்களும் சோதனைகளும் எம்மை விடமாட்டா. அவற்றிலிருந்து விடுபட வேண்டுமென்று இறையருளை நாடும் சாதனைகளைச் செய்யும்போது சோதனைகள் அடிக்கடி வந்து கொண்டுதானிருக்கும். அந்நிலையிலும் இறை நம்பிக்கையை நெகிழவிடாது தொடர்ந்தும் சாதனை செய்து கொண்டிருந்தால் சோதனைகள் எம்மையறியாமலே அகன்று விடும்.

எத்தனையோ கஷ்டங்களையெல்லாம் அனுபவித்து பணத்தைச் செலவழித்து பிரயாணம் செய்து கந்தப் பெருமானின் புனிதஸ்தலமாகிய கதிர்காமத்திலே திரண்டுள்ள மக்கள் உள்ளத்திலே இன மதபேதங்கள் எவற்றையுமே காண முடியாது. அந்தப் புண்ணிய பூமியில் அவர்கள் ஒருவரையொருவர் பக்தியுணர்வோடு 'சாமி' என்றே அழைக்கின்றனர், சேவை செய்கிறார்கள். இப்படியாக ஒருவரில் ஒருவர் இறைவனைக் காணும் உன்னத மனோநிலை அங்கு உலவுவதைக் காணலாம். தம்மை நாளிலும் பொழுதிலும் அரித்து வந்த கவலைகள் அவர்களுக்குஇல்லை கந்தா, முருகா, அரோகாரா, சாமி, என்ற இனிய வார்த்தைகசள அவர்களது வாய்களிலிருந்து புத்துணர்வோடு மதுரித்து சுரக்கின்றன.

சோதனைகளின் மத்தியில் கஷ்டப்பட்டு கதிர்காமக்கந்தனுடைய ஸ்தலத்தை ஆர்வத்தோடு நாடினோர் மனம், அகந்தைகளை மறந்து ஒருவரில் ஒருவர் இறைவனைக் காணும் பக்குவப்பட்ட மனமாகப் விளங்குகிறது.

அந்த மனப் பக்குவநிலை கதிர்காமத்திலிருந்து திரும்பி வந்த பின்பும் தம்மிடம் ஆட்சி செய்ய சாமிகள் எல்லோரும் முருகனை நோக்கி அருள் சாதனை செய்வார்களாக.

அதனால் நம்நாடு அன்பும் அருளும் நிறைந்த இன்பநாடாக ஒளி வீசும்.

''தீயவை புரிந்தாரேனும்குமரவேள் திருமுன்னுற்றால் தூயவராகி மேலைத்தொல்கதி அடைவர்'' என்பது கந்தபுராணம் கூறும் உண்மையாகும். கதிர்காமம் அதை எமக்கு உணர்த்துகின்றது. கதிர்காமம் என்றால் ஒளிமயமான அன்பு என்பது அர்த்தம்எமது உள்ளங்கள் கதிர்காமமாக மாற வேண்டுதல் செய்வோம்!

✱ கரகரப்பிரியா ✱

## இதோ ஒரு வித்துவான்

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த நாதஸ்வர வித்துவான் சாத்தனூர் கணேசன் அண்மையில் வீரமாகாளி அம்மன் கோவிலில் செய்த கச்சேரியைக் கேட்டேன்.

எதிர்காலத்தில் அவர் வேதமூர்த்தி, காருகுறிச்சி அருணாசலம் ஆகிய நாதஸ்வர வித்துவான்களின் வரிசையில் மதிக்கக் கூடிய ஒரு வித்துவானாக வளர்ந்து திகழ்வார் என்று திடமாகக் கூறும்வகையில் அவரின் இசையொலி இப்போதும் என் மனதில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

மூப்பது வயது மதிக்கத்தக்க சாத்தனூர் கணேசனின் முகத்தில் கலையின் மலர்ச்சி தவழ்கிறது. திடகாத்திரமான உடலமைப்புள்ளவர் என்று கூறமுடியாவிட்டாலும், அவர் காற்றை நாதஸ்வரத்தில் திரிகாலங்களிலும் மிக நுட்பச் செறிவுடன் அநாயாசமாகக் கொடுத்து ராகங்களிலே நகாசு வேலைகளை அழகுறச் செய்தார். அவர் வாசித்த காம்போதி ராகம் முழுப் பொலிவோடு திகழ்ந்து இசையின்ப லாகிரி ஊட்டியது.

நடுவில் மழை வந்து குழப்பி விட்டதால் கோவில் முன் கொட்டகைக்கு கச்சேரி இடம் மாற்றப்பட்டது. அத்தோடு கர்நாடக சங்கீதமும் ரசிகர்களால் இடம் மாற்றப்பட்டது.

நெஞ்சுருட்டி, தோடி எல்லாம் இனித்தான் வாசித்துக்காட்டப் போகிறேன் என்று கணேசன் கூறினாராம். சினிமாப்பாட்டு வாசிக்காவிட்டால் மழை என்றும் பாராது ரசிகர்கள் போய்விடுவார்கள் என்று ரசிகர்களின் தலைவர் ஒருவர் காதுக்குள் கிசுகிசுக்க தொடங்கியது சினிமாப்பாட்டுத் தூற்றல் மழை! சினிமாப்பாட்டுக்களானாலும் அவற்றை கன்னா பின்னா என்று வாசிக்கவில்லை கர்நாடக இசை கலந்த மெட்டிலமைந்த பாடல்களை அட்சுரசத்தியோடு வாசித்தார்.

ரசிகர்களில் இருவகையினர் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு கலைஞனில் அளவுக்கு மிஞ்சி வைத்திருக்கும் ஒருவகை அன்பும், ஒருவகை ரசனையும் அக்கலைஞனை வளர்ச்சிப் பாதையிலிருந்து சிலவேளைகளில் ஒருவகையான பாதையில் திசை திருப்பியும் விட்டுவிடுவதுண்டு.

சாத்தனூர் கணேசன் வளர்வதற்கான திறமைகள் உள்ளவர். எனவே மேலே குறிப்பிட்ட 'வகை'களிலிருந்து தன்னைக்காப்பாற்றி இசையை ஆராதனை செய்து அருள் பெற வேண்டும் என்பது எமது வேணவா.

## கூட்டுறவுக் கொள்கைகள்

அனைத்துலகக் கூட்டுறவுத் தின விழாக்கள் இந் நாட்களில் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவ் விழாக்கள் மூலம் மக்கள் கூட்டுறவுக் கொள்கைகளை தமது மனதில் ஆழமாகப் பதித்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்குடன் அவற்றை இங்கு வெளியிடுகின்றோம்.

(1) கூட்டுறவுச் சங்கத்தில் தாமாகச் சேர விரும்பி அதன் சேவைகளால் பயன் பெறக்கூடியவர்களும் உறுப்புரிமையின் பொறுப்புக்களை ஏற்கத் தயாராக இருப்பவர்களும் செயற்கையான கட்டுப்பாடுகளின்றி சமூக, அரசியல், இன, சமய பேதங்களின்றி கூட்டுறவுச் சங்க உறுப்புரிமையைப் பெறக்கூடியதாய் இருத்தல் வேண்டும்.

(2) கூட்டுறவுச் சங்கங்கள் குடியாட்சி முறையில் அமைந்தவை. உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்ட முறையில் தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமிக்கப் பட்டவர்கள் இச்சங்கங்களின் அலுவல்களை நிருவகிப்பார்கள். உறுப்பினர்களுக்கு இந் நிருவாகிகள் பொறுப்பானவர்கள். ஆரம்பச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு ஓர் உறுப்பினருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் சம வாக்குரிமை இருப்பதுடன் அவர்களது சங்கங்களைப்பாதிக்கவல்ல முடிவுகளில் கலந்து கொள்வதற்கும் அவர்களுக்குச் சம உரிமை இருத்தல் வேண்டும். ஆரம்ப சங்கங்கள் அல்லாத சங்கங்களில் நிருவாகம் பொருத்தமான குடியாட்சி அடிப்படையில் அமைதல் வேண்டும்.

(3) பங்கு முதலில் வட்டி கொடுக்கப்பட்டால் அவ் வட்டி வீதம் கண்டிப்பாக மட்டுப்படுத்தப்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

(4) ஒரு சங்கத்தின் தொழிற்பாட்டின் பயனாகப் பெறப்படும் மேலதிகப் பணம் அல்லது சேமிப்புப் பணம் அச் சங்க உறுப்பினர்களுக்கே உரியது. அதனை அவ்வுறுப்பினர்களிடம் பங்கிடும்போது ஓர் அங்கத்தவருக்குச் சாதகமாகவும், இன்னொரு உறுப்பினருக்குப் பாதகமாகவும் பங்கிடாது பார்த்துக் கொள்ளல் வேண்டும் உறுப்பினர்களின் தீர்மானத்தின்படி இதனை பின்வருமாறு செய்யலாம் : (அ) கூட்டுறவுச் சங்கத்தின் தொழில் விருத்திக்கு ஒதுக்கீடு செய்தல்.

(ஆ) பொதுச் சேவைகளை வழங்குதல் அல்லது

(இ) கூட்டுறவுச் சங்கத்தோடு உறுப்பினருக்கிருக்கும் கொடுக்கல் வாங்கல்களுக்கேற்ப விகிதாசாரப்படி அதனை உறுப்பினரிடையே பங்கிடுதல்.

(5) கூட்டுறவின் அடிப்படையான பொருளாதார குடியாட்சிக் கொள்கைகள், தொழில் முறைகள்பற்றி உறுப்பினர்களுக்கும், அலுவலருக்கும், பணியாளருக்கும், பொதுமக்களுக்கும் கல்வி புகட்ட எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(6) தங்கள் உறுப்பினர்களினதும், சமூகங்களினதும் நலவுரிமைகளைப் பேணும் பொருட்டு சகல கூட்டுறவு நிறுவனங்களும் உள்ளூர், தேசிய அனைத்துலக அடிப்படையில் நடைமுறைக்கு உகந்த எல்லா வழிகளிலும் ஒத்துழைத்தல் வேண்டும்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

## வானவில் கொடி

அனைத்துக கூட்டுறவு மகாநாட்டில் வானவில் கொடியை அனைத்துலக கூட்டுறவு நிறுவனம் தனது உத்தியோக பூர்வ சின்னமாக அங்கீகரிக்க வேண்டுமென ஆலோசனை கூறினார்.

மனித குலத்தின் ஒற்றுமைச் சின்னமாக இது திகழும் என பேணுடோ அம்மகாநாட்டில் சுட்டிக் காட்டினார். வெவ்வேறு நாடுகளிலே தேசிய கொடிகளுடன் கூட்டுறவுக் கொடியும் கூட்டுறவு விழாக்களின் போது பறக்க விடப்படவேண்டும். இதன் மூலம் அனைத்துலக சகோதரத்துவம் விளக்கப்படும் என்று அவர் கருத்துத் தெரிவித்தார்.

அவர் முன்வைத்த இந்த ஆலோசனை 1923லேதான் நனவாயிற்று. அந்த ஆண்டிலேதான் அனைத்துலகக் கூட்டுறவுத் தின விழாவை கொண்டாடும் வழக்கத்தை அனைத்துலகக் கூட்டுற

(தொடர்ச்சி 12ம் பக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

# பூரண இயக்கத்தை

ளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது, பொதுத் தேவைகளை நிறைவு செய்வது போன்ற விடயங்களை நெறியாளர்குழு உறுப்பினர்களுக்கு விளக்குவோம், என அவர் தொடர்ந்து கூறியுள்ளார்.

இத்தகைய உறுதி வாய்ந்த நற்பணிகளால் இவ்வாண்டுகிராம. மாவட்ட தேசிய மட்டத்திலான தன் விருப்பார்ந்த கூட்டுறவு இயக்கத்தை கட்டி வளர்த்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவ வேண்டுமென கூட்டுறவாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன் என தொடர்ந்து அவர் தனது செய்தியில் தெரிவித்துள்ளார்

மேலும் அவர் தனது செய்தியில் தெரிவித்திருப்பதாவது: ஐம்பத்தெட்டாவது அனைத்துலக கூட்டுறவு தினத்தை அறுபத்தாறு நாடுகளைச் சேர்ந்த முப்பத்திநான்குகோடி கூட்டுறவாளர்கள் ஆடி மாதம் 5-ந் திகதி கொண்டாடுகின்றார்கள். இக்கொண்டாட்டத்தை எங்கள் நாட்டுக் கூட்டுறவாளர்களும் இம்முறை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவது மிகவும் பொருத்தமானது.

கூட்டுறவு இயக்கம் ஜனநாயக முறைப்படி. தனியார்துறை, பொதுத்துறை ஆகிய துறைகளுடன் சரிநிகராக நின்று போட்டி போட்டு உறுப்பினர்களின் சமூக, பொருளாதார கலாசாரத்தை வளர்க்க வேண்டுமென்று அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

# சாவகச்சேரியில் கூட்டுறவுதினவிழா

சாவகச்சேரி ப நோ. கூ. சங்கம் ஜூலை 19-ந் திகதி கூட்டுறவு தினவிழாவை கொண்டாடியது.

மேற்படி சங்க மைதானத்தில் நடைபெற்ற இவ் விழாவிற்கு சங்கத்தலைவர் திரு. த. ச. சிவநாராயணமூர்த்தி தலைமை தாங்கினர்.

பிரதம விருந்தினராக மாவட்ட நீதிபதி திரு. க. வி. விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக, சாவகச்சேரி தேசிய பேரவை உறுப்பினர் திரு வ. ந நவரத்தினமும் கலந்துகொண்டனர்.

மேற்படி விழா தொடர்பாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு திருமதி க. வி. விக்னேஸ்வரன் பரிசில்களை வழங்கினர்.

கூட்டுறவ உதவி ஆக்க ஆணையாளர்களும், யாழ். மாவட்டச் செயலாளரும், கூட்டுறவுப் பெரியார்களும், பேச்சுப்போட்டியில் வெற்றியீட்டியோரும் இவ் விழாவில் உரையாற்றினர்.

சாவகச்சேரி தெங்கு பனம்பொருள் வி சங்க ஊழியர்களின் 'நல்வாழ்வு' என்ற நாடகமும் இடம் பெற்றது.

# எமது அஞ்சலி

கூட்டுறவு சிரேஷ்ட ஆக்க ஆணையாளராகச் சேவைபுரிந்து அப்பதவியிலிருந்து இளைப்பாறியபின் சில காலங்களாக யாழ்ப்பாணம் ப, நோ கூ. சங்கத்தின் தலைவராகத் தொண்டாற்றிய திரு. பூ, குமாரசாமி அவர்கள் அண்மையில் காலமாகியதால் கூட்டுறவு உலகம், அறிவும் அனுபவமும் மிக்க இனிய இதயம் கொண்ட பெரியாரை இழந்து விட்டது.

அன்னாரின் உயர்ந்த கூட்டுறவுப் பண்பும், நேர்மையும் கூட்டுறவுலகில் எவராலும் இலகுவில் மறக்க முடியாதவை.

அவரின் பிரிவால் வாடும் குடும்பத்தவருக்கும், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அப்பெரியாரின் ஆன்மா சாந்தியடைய இறைஞ்சுகிறோம்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

# கூட்டுறவால்...

பயனையும் பெறவில்லையென்பது மறுக்க முடியாத உண்மை.

''கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கம்'' அதாவது அவர்களது இயக்கமே யென்பதை மக்கள்இன்றுவரை பூரணமாக உணரவில்லை.

மக்களால் மக்களின் நன்மைக்காக, நடாத்தப்படும் கூட்டுறவு இயக்கத்தை மக்கள்பூரணமாகபயன்படுத்த ஆரம்பித்தால், வெளியார் சக்திகளின் நெருக்கடிகள் மற்றும் சமூகத் தாக்கங்கள் மக்களைத் துன்புறுத்த முடியாது. கூட்டுறவு இயக்கத்தின் முழுமையான வெற்றிக்கு சேவை, நேர்மை, ஒழுங்கு ஆகிய மூன்றும் தாரக மந்திரங்களாகின்றன.

இன்றைய உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகள் பலவற்றின் பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவு இயக்கம் பெரும்பங்கு கொள்வதைக் காணுகின்றோம்,

தேசிய மட்டத்திலும், தனி மனித மட்டத்திலும் கூட்டுறவு நாட்டுறவுக்கு வழிவகுத்துள்ளதை பல மேலை நாடுகளின் வரலாறு எடுத்துக் காட்டுகின்றது.

இத்தகைய பயன் தரும் இயக்கத்தை முழுமையாகப் பயன்படுத்தி நாமே நமது தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் நாம் பிற சக்திகளுக்கு அடிமைப்பட்டவர்களலாது சுதந்திரத்துடன் வாழமுடியும்

'கூட்டுறவே நாட்டுயர்வு'

# களவேலைப் பயிற்சி வகுப்பு

தெல்லிப்பளை ப நோ. கூ. சங்கத்தில் ஜூலை 25ந் திகதி மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித்திட்ட களவேலைப் பயிற்சி வகுப்பை செல்வி ஜெயந்தா தென்னக்கூன் ஆரம்பித்து வைத்தார்;

மேற்படி சங்கத் தலைவர் திரு. சிவமகாராசா இதற்குத் தலைமை வகித்தார்.

யாழ் கூட்டுறவுக் கல்லூரி கல்வி உதவியாளர் திருமதி அ தவபாலசிங்கம் ப. நோ. கூ ச உபவிதிகள் பற்றி விளக்கமளித்தார்

இதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் நடைபெற்றது.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

# வானவில் கொடி...

றவு இணைப்பு நிறுவனம் தொடக்கி வைத்தது.

வானவில் கொடியை தனது உத்தியோக பூர்வமான சின்னமாக ஏற்றுக்கொள்ள முடிவு செய்வதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர் புகழ்வாய்ந்த பிரெஞ்சு பொருளியல் அறிஞரும் கூட்டுறவாளருமாகிய சார்ள்ஸ் ஜீட் என்பவராவர். ', ட்டுறவு இயக்கத்தின் வானம்பாடி' என இவர் வர்ணிக்கப்படுவதுண்டு கூட்டுறவு இயக்கம் பொருளாதார வணிக முரண்பாடுகளை மட்டுமல்ல அரசியல் இராணுவ முரண்பாடுகளைக் கூட ஒழித்துக் கட்டுவதற்கு முயல்கின்றது என அவர் சுட்டிக் காட்டினர்.

ஆதலால் அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனம் வானவில் கொடியை தனது உத்தியோக பூர்வமான சின்னமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென அவர் வற்புறுத்தியதோடு நாகரீகமுற்ற நாடுகளின் கொடிகளிலே காணப்படும், கொடிய விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் பதிலாக இந்த வானவில் கொடியிலே சகோதர பாசத்தால் இணைக்கப்பட்ட கைகள் பொறிக்கப்பட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

இன்று வானவில் கொடி கூட்டுறவு இயக்கத்தின் அனைத்துலக சின்னமாகத் திகழ்கின்ற போதிலும் சில தேசிய கூட்டுறவு இயக்கங்கள் தமக்கே உரித்தான தேசிய இலச்சினைகளையும் கொண்டிருக்கின்றன





துரித சலவைக்கும்; !

பளிச்சிடும் வெண்மைக்கும் !!

மில்க்வைற் சலவைப் பவுடரை

வாங்கி உபயோகியுங்கள்,

பல அளவுகளில் எங்கும் விற்பனையாகின்றது

சிறிய பைக்கற் விலை ரூபா ஒன்று மட்டுமே !

மேலுறைகளை அனுப்பி பெறுமதி வாய்ந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.


யா. ப. நோ. கூ. ச. இணையாகிய கூட்டுறவு அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச்சபையின் யாழ் மாவட்டக் குழுவினரால் வெளியிடப்பட்டது. 12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 341-79
Registered as a News Paper at the General Post Office, Sri Lanka Under No. QB/8965/78